தென்மொழி

நலிந்துவரும் தமிழினத்தின் நலங்காப் போமே!

மொழியிலையேல் இனமில்லை; இனமிலையேல் நிலமில்லை;
முழுவுண்மை; இஃதறியா மூட ரெல்லாம்
விழியிலர்போல்; அடிமைகள்போல், தமிழினத்தை விடிவிக்க
வைப்பவர்போல் பற்பலவும் விதந்து கூறி,
வழியறியா வழிகளிலே மக்களினைப் பலகூறாய்ப்
பலகுழுவாய்ப் பலகொடிக்கீழ் வகுத்துக் கொண்டு
பழிமலிய அரசியலை நடத்துகின்றார்; பொருளியலைப்
பெருக்குகின்றார்! தமிழ்நாட்டைப் பாழ்செய் வாரே!

செந்தமிழைச் செந்தமிழர் பேரினத்தைச் செந்தமிழ்நன்
னாட்டை, இவர் போட்டியிட்டுச் சீரழித்தே,
இந்திக்கும் வடவர்க்கும் தில்லியரின் ஆட்சிக்கும்
என்றென்றும் அடிமையென ஈடு வைத்தே,
தந்தம்நலம், பதவி, அதிகாரமிவை தாம்பெறவும்
தமக்குப்பின் தம்மக்கள் பெறவும் செய்யும்
தந்திரத்தை அரசியலென் றுரைக்கின்றார்; எழுதுகின்றார்!
தமிழினமே! தாயினமே! விழிப்புக் கொள்க!

வடமொழியை ஆங்கிலத்தை இந்தியினைத் தாய்தமிழில்
வளவளென முலமுலெனக் கலந்து பேசும்
முடமொழியைத் தமிழென்று முழங்குகின்றார்! இவர்தாமோ
முத்தமிழ்க்கும் இனத்திற்கும் காவல் செய்வார்?
படமொழியில் பேச்சாளர் படுகொச்சை எழுத்தாளர்.,
பச்சைமொழிப் பாவலர்கள் வாழும் நாளில்
நடமிடுவோம் தமிழகத்தில்! நாம்செய்த வினையறியோம்!
நலிந்துவரும் தமிழினத்தின் நலங்காப் போமே!

சுவடி: 16
ஓலை: 8
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
விலை ஓர் உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

0:763: பெருமதிப்பிற்குரியீர் வணக்கம்! தாங்கள் இங்கு வந்து அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தியது ! இப்பகுதியில் மாற்றத்தினையே உருவாக்கியிருக்கிறது. பொதுவாகவே தமிழ் மேல் உள்ள ஆர்வம் கூடியிருக்கிறது. இந்த மாதம் **25-**ஆம் நாளுக்குள் குறைந்தது **ஐந்து** தென்மொழி உறுப்பினர்களாகச் சேர்த்து உடன் அனுப்பி வைக்கின்றேன்.

—**வை. அறிவுத்தொகையன்** (ஞானசேகரன்)
பெருந்தோட்டம் (சீர்காழி)

0:764: அன்புள்ள ஐயா, தங்களுக்குச் சில கருத்துகளைச் சொல்லப் பல நாளாக எண்ணியிருந்தேன். இம் மாதம் வந்த தென்மொழியின் முகப்புப் பாடலைப் படித்ததும் யான் சொல்ல எண்ணியிருந்த கருத்துகளை ஏரண முறையில் விரிவாக (நேற்று) எழுதினேன். ஆனால் இன்று தாங்கள் எண்ணுவதில் என்னினும் வல்லவராகையால் அதைக் குறிப்பாகக் கூறுவதே அமையும் எனக் கருதிச் சில மட்டும் எழுதலானேன். எண்ணிப் பார்த்து இயைந்தன மேற்கொள்க.

1. நாம் நமது வீரத்தைப் பேச்சிலோ எழுத்திலோ காட்டுதல் கூடாது. செயலில் காட்டுதல் வேண்டும். அஃதாவது சொல்லில் மென்மை. சொற்பொருளில் வன்மை. செயலில் திண்மை. இது மாற்றாரிடம் கற்று அவர்கள்பால் நடந்துகொள்ள வேண்டிய முறை.

2. நொதுமலர் (அஃதாவது அரசியல் கட்சித் தலைவர்கள் போன்றவர்கள்) செய்யும் சிறு சிறு தவறுகளைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டு, அவர்கள் செய்யும் நல்லவற்றை மட்டும் (அஃது ஏரல் எழுத்துப் போன்றதாக இருப்பினும் அமையும்) போற்றி எழுதுவது.

3. நொதுமலர் பெரிய குற்றங்கள் செய்யுங்கால் அதனை மட்டும் சுட்டி மென்மையான மொழிகளால் வன்மையாகக் கண்டித்து, திருத்தும் நோக்குடன் அன்பாக எழுதுதல்.

4. நமக்கு ஓரளவு வலிமை ஏற்படும் வரை, இருப்பவற்றில் பெரும்பாலும் நமக்கு அணிமையில் உள்ள ஏதாவது ஒரு கட்சியிடம் அகலாமல் அணுகாமல் தீக்காய்ந்து கொள்ளல்.

5. தென்மொழி அன்பர்களை ஒருங்கு கூட்டிக் கூட்டுறவு முறையில் நாளிதழ் நடத்துதல்.

6. தங்களைத் தலைவராகக் கொண்ட இயக்குநர் குழுவிற்குக் கட்டுப்பட்ட நிலையில் (நித்தலின்பனார் போலும்) அன்பர் ஒருவர்பால் அப் பொறுப்பை ஒப்படைத்தல்.

7. தேவையானால் நம் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிலையில் தொழில் தெரிந்த வேறு ஒருவரையும் சம்பளத்திற்கு அமர்த்திக் கொள்ளுதல். (தொடர்ச்சி **3-**ஆம் அட்டைப் பக்கம்)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 16 ஓலை: 8.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மீனம். தி. பி. உ0கம0-
மார்ச்சு-ஏப்ரல் 1980.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்]
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.

மீண்டும் இந்தி வெறி தலைதூக்குகிறது!

இந்தி பேசப்பெறாத மாநிலங்களில் மீண்டும் இந்தியைப் பரப்புவதற்காக, விரிவான திட்டமொன்றை நடுவண் அரசு மேற்கொண்டிருப்பதாகச் சென்ற மார்ச்சு 26-ஆம் பக்கல், நடுவண் கல்வியமைச்சர் பி. சங்கரானந்து தில்லி மாநில அவையில் தெரிவித்துள்ளார். இது பெரிதும் வருந்தத் தக்கது. இந்தி பேசாத தென்னாட்டினர்க்குக் குறிப்பாகத் தமிழ் நாட்டினர்க்கு இது பேரதிர்ச்சி தருவதாகும். இத்திட்டத்தின் அடிப்படையில் நடுவணரசு அலுவலகங்களில் இந்தி மொழியைப் பயன்படுத்துவதை அதிகப்படுத்தும் பணி தொடங்கியுள்ளது. இந்தி தட்டச்சுப்பொறிகளின் உருவாக்கத்தைப் பெருக்கும் முயற்சியும் நடைபெறுகிறது. பல்வேறு அலுவலகங்களில் பயன்படுத்தப்பெறும் அரசு நெறிமுறைகள், கோட்பாடுகள் பற்றிய பொத்தகங்கள், கையேடுகள் முதலியவை இந்தியில் மொழிபெயர்க்கப் பெற்று அனுப்பப்பெற்று வருகின்றன. அடுத்த மூன்றாண்டுக்குள் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப் பெற்றுத் தீவிரமாகச் செயற்படுத்தப்பெறும் என்றும் நடுவணரசுக் குறிப்புகள் கூறுகின்றன.

இந்தி மொழி பேசப்பெறும் பகுதிகளில் உள்ள வைப்பகங்களிலும், நடுவணரசு அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும், அவ்வட்டார மக்களுடன் தொடர்பு கொள்ளும் கடிதப் போக்குவரத்து, வேண்டுகோள் படிவங்கள், அறிவிப்புகள் முதலியவற்றில் ஏற்கனவே இந்திமொழி மட்டுமே பயன்படுத்தப் பெற்று வருகிறது. மற்ற மாநிலத் தொடர்புகளுக்கு இந்தியுடன் ஆங்கிலமும் இக்கால் பயன்படுத்தப் பெற்று வந்தாலும், இனி, எதிர்காலத்தில் ஆங்கிலம் படிப்படியாக நீக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது. நடுவணரசின் ஆட்சி மொழிச் சட்டத்தின் படி, அரசின் எல்லாவகைச் சுற்றறிக்கைகளும் உத்தரவுகளும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலுமே அனுப்பப்படவேண்டும் என்ற நெறிமுறை உண்டு. இந்நெறிமுறை படிப்படியாக மீறப்பட்டு, ஆங்கில மொழி தவிர்க்கப் பெற்று, இந்திமொழி அறிக்கைகளே வருவதாக ஆங்காங்கு மாநில அரசுகள் குற்றம் கூறி வருகின்றன. ஆட்சிமொழிச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப் பெற்றதாகக் கூறப்பெற்று வரும் தமிழகத்திலும், இங்குள்ள எல்லா நடுவணரசு நிறுவனங்களிலும் இந்திமொழியே பெருமளவில் பயன்படுத்தப் பெற்று வருகிறது. இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள நடுவணரசு நிறுவனங்களில் மேலாளுமைகளில் உள்ள இந்தி வெறியர்கள் சிலர் தம்தம் அலுவலகங்களின் விளம்பரப்பலகைகள், எண்கள், பக்கல்கள் முதலியவற்றை இந்தியிலேயே கையாண்டு வருவதாகத் தெரியவருகிறது.

இவற்றுக்கிடையில் தில்லி முதலிய வடநாடுகளில் உள்ள இந்தி வெறியர்கள் தம்தம் பகுதிகளில் உள்ள கடைகளின் விளம்பரப் பலகைகள், ஊர்திஎண்கள் வீட்டுஎண்கள் முதலியவற்றை முழுவதும் இந்தியிலேயே எழுதி வைத்து வருவதாகவும், அங்குப்போகும் தென்னாட்டுப் பகுதி மக்களிடை இந்தியிலேயே உரையாட முற்படுவதாகவும், அவர்கள் ஆங்கிலத்திலோ, பிறமொழிகளிலோ பேசினால் அவர்களுக்கு விடைகூற மறுப்பதாகவும், இந்தியிலேயே பேசக் கட்டாயப் படுத்துவதாகவும் சிற்சில இடங்களில் அவ்வாறு இந்தியில் பேசாதவர்களை அடித்துத் துன்புறுத்துவதாகவும், பற்பலவாறு செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன.

இந்த நிலைகளை யெல்லாம் கண்டும் காணாதவர்கள் போல், இங்கு வரும் நடுவண் அமைச்சர்கள் 'இந்தி திணிக்கப் படுவதில்லை; தென்

ளுட்டவர்கள் விரும்பும் வரை ஆங்கிலமே தொடர்பு மொழியாக நீடிக்கும்' என்று வெறும் கண்துடைப்பாகப் பேசிவிட்டுப் போய் விடுகிறுர்கள். ஆனல் உண்மையிலேயே இப்பொழுதுள்ள நிலை மிக அஞ்சத்தக்கதாகவும், வருந்தத்தக்கதாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பலர் இப்பொழுது இந்தி படிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். தனியார் பள்ளிகளில் இந்தி பயிற்றுவிக்கப்பெற்று வருகிறது. பாலர் பள்ளிகளில் இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழி களும் குழந்தைப் பருவத்தினர்க்குப் புகட்டப்பெற்று வருகின்றன. சில தமிழகப்பள்ளிகள் இந்தியையும் ஆங்கிலத்தையுமே பயிற்று விக்கின்றன. அவை தமிழைப் பயிற்றுவிப்பதில்லை. இங்குள்ள ஆரியப் பார்ப்பனர்கள் இந்தி படிப்பதில் மிகுந்த அக்கறையும் ஆர்வ மும் காட்டுகின்றனர். அவர்கள் தொடர்பானபள்ளிகளில் இந்திக்கும், சமசுக்கிருத மொழிக்கும் ஆங்கிலத்திற்கும் பேரார்வம் காட்ட பெறு கின்றது. தமிழில் அவர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள் இந்தியும் ஆங்கிலமும் படித்து வடநாட்டுப் புறங்களிலும் வெளிநாடுகளிலும் பட்டமும் பதவியும் அதிகாரமும் வாய்க்கப் பெற்ற வர்களாய் விளங்குவதைப் பார்க்கும் தமிழர்களில் பெரும்பான்மை யரும், தத்தம் பிள்ளைகளை இந்தியிலும் ஆங்கிலத்திலுமே பயிற்சி பெறும்படி செய்கின்றனர். தங்கள் தாய் மொழியான தமிழ் மொழி பயில்வதை அவர்கள் பயனற்றதாகவும், நோக்கமற்றதாகவும் கருதுவதுடன் தாழ்வாகவும் சிலர் இழிவாகவும் கருதுகின்றனர்.

இந்த நிலையில் இங்குள்ள அரசியல்தலைவர்கள் சிலர் மக்களிடம் சாய்கால் பெறவேண்டியும், ஒப்போலை பெற்றுச் சட்டமன்றங்களில் நுழைய வேண்டியும், மேடைக்கு மேடை எழுத்துக்கு எழுத்து இந் தியை எதிர்ப்பதாக வீறு முழங்கப் பேசுவதும், விறல் தெறிக்க எழுதுவதுமாகத் தொடர்ந்து எதிர்ப்புணர்வைக் காட்டி வருகின்ற னர். இவர்களில் சிலரும் தம்தம் பிள்ளைகளை இந்தி படிக்கவும் வைக் கின்றனர். அதுபற்றி எவரேனும் கண்டுகேட்டால் 'இந்தி படிப்பதில் தவறில்லை என்றும், அதை விரும்பாதவர் மீது திணிப்பதுதான் தவறு' என்றும் உலகியல் பேசுகின்றனர். சிலர் தலைவர்களோ, 'இந்தியைப் படிக்க வில்லையானுல் நாம் மிகவும் பின் தங்கி போவோம்; இந்தி இன்றில்லையேனும் ஒருநாள் இந்தியா முழுவதும் ஆட்சி செய்யப்போவது மிக உறுதி' என்று மக்கட்கு அறியுரை கூறி வருகின்றனர். பகுத்தறிவு பேசும் திராவிடர் கழக அன்பர்கள்

கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகி அதுவும் தேய்ந்து ஒன்றுமில்லாமற் போனது போல், திராவிட நாட்டுக் கொள்கை மாறித் தமிழ்நாட்டுக் கொள்கைக்கு வந்து, பின் அதுவும் போய், இக்கால்' பகுத்தறிவு, தன்மானம் (சுயமரியாதை) இவற்றை மட்டுமே பெரியார் எங்களுக்குக் கற்பித்தார் என்று கூறி வருவதுடன், அந்த வகையில் அவ்வப்பொழுது இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் போடுவதும், அவ்வாறு போட்டாலும், 'தமிழ்மொழி வளர வேண்டும், வாழ வேண்டும் என்பதற்காக நாங்கள் இந்தி யெதிர்ப்புச் செய்யவில்லை; தமிழ் எக்கேடுகெட்டால் எங்களுக்கென்ன? ஆங்கில மொழியை இந்தி வெறியர்கள் அகற்றி விடக்கூடாது; அதற்காகவே நாங்கள் இந்தியெதிர்ப்புச் செய்கிறோம்' என்பதாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அதிலும், இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் நாம் தமிழ்மொழியின் பொருட்டுப் பாடுபடுவதைப் பார்க்கவும் கேட்கவும் பொறுக்காதவர்களாய், நம்மைப் பழமை விரும்பிகள் என்று இழித்தும், இறைமையை நம்பும் பகுத்தறிவில் லாதவர்கள் என்று இகழ்ந்தும், தமிழுக்காகவும் தமிழினத்திற்காக வும் நாம் செய்யும் தொண்டைப் புறக்கணித்தும் வருகின்றனர். இந் நிலையில் நாம் இந்தியெதிர்ப்பை முறையான அடிப்படையில் செய்யாத தன்மையை வடநாட்டினர் நன்கு புரிந்து கொண்டு விட்ட தாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது.

மேலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் திரவிட இன வலிமையைத் தனித்தனியாக வேனும் நிலை நாட்டிக்கொண்டிருந்த தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய இரு கட்சிகளும், இனி எதாமோர் அனைத்திந்திய வடநாட்டுக்கட்சியின் துணையின்றித்தாங்கள் ஆட்சி யமைப்பது இயலாது என்று கருதும்படி தங்களுக்குள் மிகவும் வேறு பட்டும் மாறுபட்டும் இயங்கத்தொடங்கும் நிலைக்குள்ளானதைத் தொடர்ந்து, வடநாட்டிலுள்ள அனைத்திந்தியக் கட்சிகளில் உள்ள இந்தி வெறியர்களுக்கு இப்பொழுது மீண்டும் கொண்டாட்டம் ஏற் பட்டு, இந்தச் சூட்டோடு சூடாகவே தங்கள் ஆளுமையையும், மொழி யையும் வலுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று மனக்கிளர்ச்சி உண்டாகி, அதனால் இந்தி பரப்பும் முயற்சிகளில் மிக வேகமாக இயங்கிச் செயல்படுவதாகவும் தெரிகிறது.

இவற்றின் எதிர்கால விளைவுகளை நன்கு உணர்ந்து கொண்ட '*தினமணி*' **சிவராமன்**களும் '*துக்ளக்*' '**சோ**'க்களும், தம் இன

மக்களுக்கும் தமிழ் இன மக்களுக்கும் இந்தி படிப்பதை வலியுறுத்தியும் ஊக்குவித்தும் வருகின்றனர். தினமணியில் மீண்டும் இந்திப் பாடங்கள் வருமென்று அறிவிப்பும் வந்திருக்கிறது. இத்துடன் இங்குள்ள அரசியல் தலைவர்கள் சிலர் இக்கால் அடிக்கடி 'தமிழர்கள் தம் வருங்கால முன்னேற்றத்தை எண்ணி இந்தி படித்துக் கொள்ள வேண்டும்' என்று கனிவான வேண்டுகோளையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வகைச் சூழ்நிலைகளின் துணிவால் இங்குள்ள நடுவணரசு இந்தி பரப்பு நிலையங்களும், பிற நிறுவனங்களும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும், விரைவாகவும் விடாமுயற்சியோடும் இந்தி பயிற்றுவிப்புப் பணிகளை முடுக்கமாகச் செய்து வருகின்றன. நிலைகள் இவ்வாறுள்ளன. இனி நாம் செய்ய வேண்டுவது என்ன?

முதற்கண் ஒன்றை நாம் உணர்ந்தாகல் வேண்டும். இன்றைய நிலையில் மட்டுமன்று, இனி என்றைய நிலையிலும் இந்திய ஆட்சி மொழிச்சட்டம் உள்ள வரை இந்தியை நாம் எந்த வகையிலும் எதிர்த்துத் தவிர்த்து விடவோ, தகர்த்து விடவோ முடியாது. இந்தியை நம் முன்னைய தலைவர்களும் நாமும் தொடர்ந்து, **1938-**இலிருந்து, எதிர்த்துக்கொண்டுதான் வந்துள்ளோம்; வருகின்றோம். **1965-**இல் பெரிய இந்தியெதிர்ப்புப் போரையே நடத்திக்காட்டினோம். அதில் பல உயிரழிவுகளும், பலவாறன பொருளழிவுகளும் ஏற்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான பேர் காவலர்களால் தாக்கவும் பட்டனர்; சிறைப்படுத்தப்பட்டனர்; நூற்றுக்கணக்கான பேர் மாண்டனர். இருப்பினும் இந்தி படிப்படியாக, சிறிது சிறிதாகப், பரப்பப்பட்டும், திணிக்கப்பட்டுமே வந்திருக்கிறது; வருகிறது. இதற்குக்கரணியம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்திமொழி, இந்தியாவின் தேசியமொழி, ஒருங்கிணைப்பு மொழி என்று ஏற்றுக்கொள்ளப் பெற்றுவிட்டது. என்பது மட்டுமன்று; இந்தியை எதிர்ப்பதில் தென்னாட்டவர்க்கு, குறிப்பாகத் தமிழர்க்கு முழுஒற்றுமை இல்லையென்பதும் பெருங்கரணியமாக இருத்தல் வேண்டும். நாம் பலவாறு வேறுபட்டிருப்பதும், பல கொள்கைக்காக இந்தி எதிர்க்கப்படுவதும் வடநாட்டினர்க்கு, முகாமையாக இந்தி வெறியர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

பொதுவாக, அரசியலைப் பொறுத்தவரையில் தென்னாட்டில் மட்டுந்தான், அதிலும் தமிழகத்தில் மட்டுந்தான் இந்தி மொழி பரப்புதல் ஒருசிக்கலாக உள்ளது. தமிழகத்தில் கூட திரவிட இனப்

பரம்பரையை நிலைநாட்ட விரும்பும் இரண்டு மூன்று கட்சிகள் மட்டுந்தான் இந்தியை எதிர்க்கின்றன. இவர்கள் கூட, வரலாற்றுக் குரிய நிலையில் தமிழ்மொழிக்குள்ள நயன்மையான உரிமையை மீட்க வேண்டும் என்றும் அடிப்படையிலும், அரசியலில் தமிழ்மக்கள் அடிமைப் படுத்தப்பட்டு விடக்கூடாது என்னும் நோக்கிலும் முழுமையாக இந்தியை எதிர்ப்பதாகக் கருதமுடியாது. அரசியல் நிலையில் தங்களுக்கோர் ஆளுமை நிலையைப் பொதுமக்களிடம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்தியை இவர்கள் எதிர்ப்பதாகத் தெரிகிறது. இவர்களுள் சிலர் குறிப்பாகத் திராவிடக் கழகத்தார் ஆங்கிலத்தின் மேல்உள்ள ஆர்வத்திலேயே, அதைத்தவிர்த்தால் அந்த இடத்தை இந்தி பிடித்துக்கொள்ளுமே என்னும் கருத்தில் முழுக்க முழுக்க இந்தியை எதிர்க்கின்றதாகச் சொல்லி வருகின்றனர். இவர்களுக்குத் தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி, பலவாறான அறிவியல் கூறுகளை கொண்டது என்பதிலெல்லாம் நம்பிக்கையிருப்பதாகச் சொல்ல முடியாது. ஆரியத்தின்மேல் உள்ள வெறுப்பு இவர்களுக்கு ஆரியமொழியின் மேல்இல்லை. அதுபோலவே தமிழர்களின் -இன்னுஞ் சொன்னால் திரவிடர்களின் மேல் இவர்களுக்கு உள்ள பற்று, தமிழ்மொழியின் மேல்இல்லை.

ஆக, நம் இந்தி எதிர்ப்புணர்ச்சிக்கு இன்னும் சரியான அடிப்படையை அமைத்துக்கொள்ள நாம் முயலவில்லை. எனவேதான் அதனை எதிர்ப்பதில் இன்னும் நமக்குள் ஒற்றுமை ஏற்படவில்லை. ஒரு மொழி மேம்பட்ட உரிமையுணர்வோடு நம்மை ஆள வருகிறது என்றால், தாய்மொழி உணர்வுள்ளவர்களால் மட்டுந்தான் அதனைச் சரியான முறையில் எதிர்த்துப் போராட முடியும். தாய்மொழிப் பற்றில்லாதவர்கள் இனப்பற்றிலும் குன்றியிருப்பார்களாகையால் அவர்கள் ஓர் உயிர்க் காரணமின்றி ஒரு மொழியை எதிர்ப்பார்கள்; அல்லது ஒன்றை வரவேற்பார்கள். இந்த வகையால்தான் இங்கு இந்திமொழி எதிர்க்கப்படுகிறது; ஆங்கிலம் வரவேற்கப்படுகின்றது.

உணர்வுத் தொடர்புக்காகவும் அல்லாமல், வெறும் கருத்துக்களைப் பரப்புவதற்காக மட்டுந்தான் மொழி என்று சொல்வோமானால், நமக்குள் ஓரின ஒற்றுமை ஏற்படுவதற்கு அடிப்படையாக எதை உறுதிப்படுத்திக்கொள்வது? மொழியின் அடிப்படையில்தான் இனம், இனத்தின் அடிப்படையில்தான் நாடு, நாட்டின் அடிப்படையில்தான் அரசு என்ற அமைப்புகளே உலகம் முழுவதினும் ஏற்பட்டுள்ளது

நாம் மட்டும் அவ்வமைப்புக்கு விலக்கில்லை. தாய்மொழியுணர்வற்ற ஓரினம் தனித்தேசிய இனமாக இவ்வுலகில் இயங்க முடியாது. இந்த அடிப்படையில்தான் இந்திய மக்கள் அனைவரையும் ஒரே தேசிய இனமாக உருவாக்கும் நோக்கத்துடன் இந்தி மொழியும் திணிக்கப் பெறுகிறது. ஓர் இனத்தின் ஒற்றுமையுணர்ச்சிக்கு மொழி முகாமைப் படவில்லையானால், இந்தி மொழித்திணிப்பே தேவையில்லாத தொன்றாகிவிடும்; அதுவும் இவ்வளவு எதிர்ப்புக்கிடையில் இந்தித் திணிப்பு முயற்சியையே அவர்கள் இந்நேரம் கைவிட்டிருப்பார்கள்!

எனவே நம் தாய்மொழியுணர்ச்சியால்தான், பிறமொழி வல்லாண்மையை நாம் முறியடிக்க முடியும். அறிவு அடிப்படையான விளக்கங்கள் கூட, ஓரினத்தை, மொழியுணர்வு போல் அவ்வளவு கட்டுக்கோப்பாக, ஓரினப்படுத்திவிட முடியாது. அத்தகைய ஒருமையில் சிலவேளைகளில் தளர்வுகளும் பிளவுகளும் இருந்தாலும் மொழியுணர்வே - தாய்மொழிப் பற்றே, நாம், இந்தியை எதிர்க்கத் தேவையான அடிப்படைக் கூறாகும். தாய்மொழியுணர்வு வளர வளரத்தான் பிறமொழியுணர்வுகள் நமக்கு இயற்கையாகவே தள்ளுண்டுபோகும். தமிழன் தன் தாய்மொழியாகிய தமிழைக் கைநெகிழ்த்ததால்தான் இன்று பலவகையாலும் மாற்றினத்திற்கும், மாற்றுமொழிக்கும், மாற்றுப் பண்பாட்டு நாகரிகத்திற்கும் கீழ்மைப் பட்டுக் கிடந்துழல வேண்டியிருக்கிறது. ஆகவே, நம் தாய்மொழியுணர்வில் நாம் மேம்பட்டு நின்றாலொழிய, நம் இந்தியெதிர்ப்பு முயற்சிகளும் வெற்றிபெறப் போவதில்லை என்பதை இங்குள்ள அனைத்துக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் தொண்டர்களும் நன்கு விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இல்லாவிடில் இந்திக்காரர்களிடத்தில் இன்றில்லாவிடினும், பின்னொரு நாளில் நம்மை நாம் இழந்துவிட வேண்டியிருக்கும் . என்பதை எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

—பெருஞ்சித்திரனார்.

மறைமலையடிகள் வரலாறு

0 **900 பக்கங்களுக்கு மேல் கொண்டிலங்கும் இந்நூல் மிகச் சிறந்த ஒரு வரலாற்று நூலாகும்.**

0 **தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள விரும்பும் தமிழன்பர்கள் தவறாமல் படிக்க வேண்டிய உணர்வு வடிவாக எழுதப்பெற்ற சுவைமிகு அரிய நூல்.**

0 **அரிய பல செய்திகள், நிகழ்ச்சிகள், அறிஞர்கள் பலரின் துணை வரலாறுகள் முதலியன செறிந்த விரிவான நூல்.**

விலை உருபா : 25—00 அஞ்சல் செலவு தனி.

கிடைக்குமிடம் : ஆசிரியர்

புலவர். மறை. திருநாவுக்கரசு,

43, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை-82.

உடல் நலம்-மருத்துவம்!
-சில பயனுள்ள குறிப்புகள்!

- o நீரைக் கருக்கி, நெய்யை உருக்கிப் பாலைச் சுருக்கி, மோரைப் பெருக்கி உண்ண வேண்டும் என்பது மருத்துவ முறை. நீரைக் கருக்கல் என்பது நன்றாகக் காய்ச்சி இளஞ்சூடாய்ப் பருகல். நெய்யை உருக்காது உண்ணலாகாது. பாலைச் சுருக்கல் பாலை வற்றக் காய்ச்சல்.
- o படிகாரத்தைப் பொடி செய்து கரைத்துத் தலையில் தேய்த்து இரண்டு மணி நேரம் ஊறவைத்த பின்பு குளிக்க தலையில் உள்ள பேன்கள் அனைத்தும் சாகும்.
- o பாம்பு உரித்த சட்டைத்தோலை வெயிலில் நன்றாக உலர்த்திப் பொடி செய்து வழுக்கை மண்டையில் தேய்த்து வர, மீண்டும் முடிவளரும்.
- o அடுக்கு நந்தியாவட்டைப் பூச்சாற்றைத் தோலில் வெண் குட்டம் உளள பகுதிகளில் தடவி வர வெண்ணிறம் மாறி இயற்கை மேனியின் நிறம் வரும்.
- o கொட்டைப் பாக்கும் படிக்காரமும் சம அளவு எடுத்துத் தனித் தனியாக இடித்துத் தூள் செய்து கலந்து வைத்துக்கொண்டு பல் துலக்கி வர, பல் நோய்கள் யாவும் தீரும். வெந்நீரில் வாய் கொப்பளிக்கவும்.
- o பாலில் வெள்ளைப்பூண்டு (5, 6 பற்கள்) இட்டு நன்றாகக் காய்ச்சி இரவில் உண்டு வர அரத்தக் கொதிப்பு (Blood Pressure) அறவே நீங்கும்.
- o சிறுசீரகம், இந்துப்பு, ஓமம், திரிகடுகம் (சுக்கு, மிளகு, திப்பிலி) கருஞ்சீரகம், பெருங்காயம்-இவற்றைச் சம எடை எடுத்து மென்வறுவலாக மண்சட்டியிலிட்டு வறுத்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு அவ்வப்பொழுது சிட்டிகையளவு வாயிலிட்டு வெந்நீர் குடித்தோ, தேனிலாவது நெய்யிலாவது குழைத்தோ உண்டு வந்தால், எவ்வகை வளிந் தொல்லையும் ஏற்படாது.
- o வயிற்றுக் கடுப்புக்குப் பலவகை மருந்துகள் தமிழ் மருத்துவத்தில் சொல்லப் பெறுகின்றன. அவற்றுள் சில எளிய முறைகள்:

1) இளநீரில் எலுமிச்சம் பழச் சாற்றைப் பிழிந்து கொடுக்கவும்.
2) ஒரு கடுக்காயைக் கொட்டை நீக்கிச் சதையையும் தோலையும் நீர் விட்டு அரைத்து இரவில் ஒரு குவளைத் தயிரில் கலக்கி வைத்து விட்டு, அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்த கடுமையான வயிற்றுக் கடுப்பும் உடனே நிற்கும். எருமைத் தயிர் மிக நல்லது.
3) எருமைத் தயிரில் ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து கொடுக்கக் குணமாகும்

நோய் வருமுன் எச்சரிக்கையாய் இருங்கள்!

இராமயண இலங்கை ஒரிசாவில் இருந்தது!

வரலாற்றுப் பேராசிரியர் **எச். டி. சங்காலியாவின் ஆய்வு**

(முன்னுரை: இராமாயணம் வடநாட்டில் எங்கோ எப்பொழுதோ நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சி அல்லது கதையாக இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு விரிவான கதைகளை, இக்காலப் புதின ஆசிரியர்களைப் போலும், அக்காலப் பாவிய ஆசிரியர்கள் சிறியவும் பெரியவுமான கற்பனை விரிந்த பாவியங்களையும் நெடுங் கதைகளையும் எழுதித் தங்கள் புலமை வெளிப்படுமாறு பொது மக்களிடம் பரப்பினர். நாளடைவில் அக்கதையின் அடிப்படையே மாறிப் போனது. பிராமணர்களுக்குப் பேரெதிர்ப்பாளர்களாக விருந்த **தசரதன், சனகன், இராமன்** முதலிய அரசமரபுப்புரட்சியாளர்களை அவர்களுக்குச் சார்பினராகக் காட்டிக் கதையையே மாற்றியமைத்தனர் ஆரியப் பார்ப்பனர்கள். விசுவாமித்திரன் திரவிட முனிவன். வசிட்டன் என்னும் ஆரியப் பார்ப்பன குரு, பார்ப்பன் எதிர்ப்பாளன் தசரதனிடமிருந்து, அவனினும் அவ்வெதிர்ப்பில் முனைந்து நின்ற இராமனை அவனிடமிருந்து பிரிவு படுத்திக் காட்டுக்கனுப்பி, அதனால் தசரதனை வஞ்சகமாக கொல்வித்தான். வசிட்டனின் கரவினை அறிந்த திரவிட முனிவனும் பார்ப்பன எதிர்ப்பாளனுமாகிய விசுவாமித்திரன், இராமனைத் தடுத்தாட்கொண்டு, வேத எதிர்ப்பாளனும், திரவிட மெய்யறிவு நூல்களாகிய உபநிடதக் கொள்கை இயக்கத்திற்குத் தலைவனும், மிதிலை மன்னனுமாகிய சனகனிடம் கொண்டு வந்து சேர்த்து, அவன் மகளாகிய சானகியை அவனுக்குத் திருமணம் செய்வித்து இருவரையும் உறவாக்கி, ஆரியப் பிராமண எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்தினன்.

இறுதிக் காலத்தில் இராமனின் இல்லறச் சிக்கலைப் பயன் படுத்திக் கொண்டு, பிராமணர்கள் அவனைத் தம் வயப்படுத்தித் தன் மனைவியால் ஏற்பட்ட அவமானம் தாங்காது சரயு ஆற்றில் விழுந்து அவன் தற்கொலை செய்து கொள்ளும்படி செய்து விட்டு, அவனையும் ஒரு தோற்றரவாக (அவதாரமாக) ஆக்கி, அவன் கதையைத் தங்களுக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். பிராமணரின் குமுகாயக் கரவுவினைகளுள் ஒன்று, தம் வாழ்வுக் காலத்தில் தம் இன எதிர்ப்பாளராகவிருந்த எவரையும், அவர் மறைந்த பின்னர் படிப் படியாகத் தம் இனச் சார்பாளராக ஆக்கிக் கொள்வது. புத்தர் போன்றவர்களும் இதற்கு விலக்குப் பெற முடியவில்லை. தம் வாணாள் முழுவதும் பிராமண எதிர்ப்பாளராக விருந்த பெரியார் அவர்களின் நிலையும் எதிர்காலத்தில் இத்தகையதாகவே முடியும் என்பது இன்றைய அவர் கட்சியினர் பலருக்குத் தெரியாது. இது, நிற்க.

உண்மை இராமாயண வரலாற்றை அறியாமலும் வால்மீகி இராமாயணக் கதையில் மயங்கியும் தம் பெரும் புலமைத் திறனைச் செலுத்துதற்கு ஒரு வலிந்த கதை கிடைக்காமலிருந்த காலத்தும், ஆரிய அடிமைத்தனத்தாலும், ஏற்கனவே புகழ்பெற்று விளங்கும் கதையைப் பாவியமாக்கினால் தம் புலமை நிலைபெறும் என்ற நினைவாலும், சமயப் பித்தாலும், தமிழ்ப் பெரும் புலவர் **கம்பர்**, இராமன் கதையைப் பெரும் பாவியமாக்கியது தமிழினத்திற்குப் பெருங் கேடாய் முடிந்தது என்பதை ஆரிய அடிவருடிகள் என்றுமே உணர முடியாது. ஆரியர்கள் ஒப்பவே மறுப்பர்.

உண்மையில் இராமாயணக் கதைக்கும் தென்னாட்டுத் தமிழர்களுக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. இராமன் தென்னாடு வந்ததே இல்லை. இராமாயண இலங்கையும் இன்றுள்ள இலங்கையோ, குமரிக்கண்டத் தென்னிலங்கையோ அன்று. இராவணனும் நம் இலங்கை இராவணன் அல்லன். இவ்வுண்மை பலருக்குத் தெரியாமல் பல தவறுகள் நேர்ந்து விட்டன. சில நிலைகளில் சில மறுப்புகள் மறுக்கும் முறையால் நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்திவிடும். அம்முறையில் பெரியார் செய்த இராமாயண எதிர்ப்பு இராமாயணப் பரவலுக்கு ஒருவகையில் ஆக்கமாகவே அமைந்து விட்டது. அவர் தொட்டிருக்கக் கூடாத தமிழின முன்னேற்ற முயற்சிகளில் இராமாயண எதிர்ப்பும், இறை மறுப்பும் தலையாய கூறுகள். அவற்றை அவர் செய்த தலையாய பிழைகள் என்றாலும் தவறாகாது. 'குரங்கை நினைக்காமல் மருந்தைக் குடி' என்ற மருத்துவன் கட்டளையைப் போன்று இராமாயணக் கதையை விரிவாகக் கூறி அதனைத் தமிழர்கள் மறக்கும்படி முயன்றார். அம்முயற்சியின் வழி இராமாயணம் காசில்லாமல் மிகு விளம்பரம் பெற்று விட்டது. அடிப்படையைச் சரியாக அமைத்துக் கொள்ளாத இவ்வகை முயற்சிகளாலேயே தமிழும் தமிழினமும் தாம் இழந்த சிறப்பியல்களை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள அயராத அரும்பாடுகள் பட்டும் இடையிடைப் பெருஞ்சரிவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இன்று இராமாயணக் கொள்கைக்கே பேரிடி விழுந்திருக்கிறது. கம்பவிராமாயணம் முழுக்க முழுக்க பெரும் புளுகுகளும் பொய்களும் கற்பனை மதிமயக்கும் நிறைந்த ஒரு பெரும் இன இழிவு முயற்சியே! அக்கம்பவிராமாயணத்தாலேயே வயிறும் வாயும் கழுவும் கம்பரடிப் பொடிகளும் ஆரிய அடிவருடிகளும் இங்கு மிகுதி. அவர்களுக்கெல்லாம் இனி வரும் எதிர்கால ஆராய்ச்சி முடிவுகள் பெரும் அதிர்ச்சிகளையும் அழிவுகளையும் தர வல்லன. இதுபோலும் ஓர் ஆய்வுக் கட்டுரை முன்பே தென்மொழியில் வந்துள்ளது.

கீழ்வரும் செய்தி அத்தகைய ஆராய்ச்சி முடிபுகளுள் ஒன்று. இதைக் கம்பவிராமாயணக் கிறுக்கர்கள் கவனத்தில் கொள்ளாமற் போனாலும், தமிழின முன்னேற்றத்திற்கு உழைக்கின்ற

தமிழிளைஞர்கள் இச்செய்தியை நன்கு கவனித்து, இதுபோலும் தொடர்புடைய பிற ஆராய்ச்சி முடிவுகளையும் தேடிப் படித்து விழிப் புணர் வெய்துவார்களாக. —பெருஞ்சித்திரனார்.)

தினமணி மதுரைப் பதிப்பு (12-2-80)-இல் வந்த செய்தி:

'இராவணன் ஆட்சிபுரிந்த இலங்கை இப்பொழுது **சிறீலங்கா** என்று அழைக்கப்படும் இலங்கை **அன்று**. இராவணனுடன் இராமன் போர் புரிந்த **'லங்கா'** நகரம் ஒரிசா மாநிலத்தில் அமைந் திருந்தது' என்று புகழ் வாய்ந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர் **எச். டி. சங்காலியா** கூறுகிறார்.

ஒரிசா மாநிலத்தில் உள்ள பசுதார் அருகே, பேராற்றங்கரையில் (மகாநதி) உள்ள அடர்ந்த காட்டில் சோனேபூர் என்ற நகரம் இருக் கிறது. அந்த நகரத்தைச் சார்ந்த பகுதியில் இராமாயண காலத்து லங்கா நகரம் இருந்தது என்று சங்காலியா கருதுகிறார்.

சோனேபூரில் நிலத்தைத் தோண்டிப் பார்த்து ஆய்வுகளை நடத்தியதில் மண்பாண்டங்களும் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. அவற்றை ஆராய்ந்து பார்த்ததில் இராவணனின் லங்கா நகர் சோனேபூர் பகுதியில்தான் இருந்தது என்பது மெய்ப்பிப்பாகி (நிரூபணம்) உள்ளது என்கிறார் சங்காலியா.

சோனேபூரை யொட்டி, பேராற்றில் உள்ள ஒரு தீவில் தோராயமாக 3300 அடி நீளமும், 1650 அடி அகலமும் உள்ள ஒரு பெரிய நகரம் இருந்தது என்பதற்கான தடயங்களைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்குழு ஒன்று, கடந்த கிழமை கண்டுபிடித்திருக் கிறது. அக் குழுவை சங்காலியாவே அனுப்பினார். அதுவே இராவணனின் லங்காவாக இருக்கலாம் என்று அவர்கள் கருது கின்றனர்.

இராவணனை வணங்கும் மக்கள்!:

அந்தப் பகுதியில் 'கோண்ட்' என்னும் பெயரிய பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் இன்றுங்கூட இராவணனை கடவு ளாக வழிபடுகின்றனர். 'சவரி' என்ற மற்றோர் இனத்தவர்கள் இராமனைக் கடவுளாக வழிபடுகிறார்கள். இவர்கள் இராமாயணத்தில் வரும் 'சபரி'யின் வழிவந்தவர்களாக இருக்கக் கூடும்.

பழங்குடி மக்களில் வேறு சிலர் 'அனுமான்' உருவங்களை எரிப் பதைத் தங்கள் மதச் சடங்குகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். பழங்குடிமக்கள் வாழும் பகுதியில் 'லக்கா' 'லங்கா' என்ற பெயரில் இப்போதுகூட சில இடங்கள் இருக்கின்றன. சோனேபூர் பகுதி 'அசுர காடு' என்று அழைக்கப்படுகிறது; இராவணன் அசுரர்களின் மன்னனாக இருந்ததற்கும், அந்தப் பெயருக்கும் உள்ள தொடர்பைச் சங்காலியா சுட்டிக் காட்டுகிறார் இராமன் தென்னிந்தியாவிலேயே காலெடுத்து வைக்கவில்லை; இப்பொழுதுள்ள சிறீலங்காவுக்கே (இலங்கை) அவன் போகவில்லை என்பது அவரது கருத்து.

தமிழ், தமிழர் பற்றிய செய்திகள்

- 'தமிழ்' என்னுஞ் சொல் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்னும் முப்பொருள்களிலும் வழங்கி வந்தது. *(புறம் 19, 168, 198)*

- பழந்தமிழாகிய திரவிட மொழி ஆரியர்க்கு முன் இந்தியா முழுதும் பரவியிருந்தது. *(Vide 'Pre-Aryan and Pre-Dravidian in India' பக். 35, 36, 38, 39); (Origin and Development of Dravidian Languages by S. K. Chatterji பக். 41-45)*

- தமிழ்ச் சொற்கள் பல **ரிக்** வேதத்தில் இடம் பெற்றுள்ளன. திரவிடர்க்கே உரிய கொள்கைகள் பல, வேதங்களிலும் சம்கிதைகளிலும் இடம் பெற்றுள்ளன. பிற்காலங்களில் தமிழர் வீரக் கடவுளாகிய **முருகன்** சுப்பிரமணியனாக வடநூல்களில் இடம் பெற்றான். *(Dravidian India. by T. R. Sesha Iyengar பக். 96, 97)*

- பெரும்பாலும் பிராகிருதச் சொற்களே சிதைந்து இன்று தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ள வடமொழிச் சொற்கள் ஆகும். இவை நேரான சமசுக்கிருதச் சொற்கள் அல்ல. இது 'பாகதச் சிதைவு' என உரையாசிரியர் ஆங்காங்குக் கூறிப் போதலே இதற்குச் சான்றாகும்.

- வட இந்தியாவில் இருந்த தமிழே சமசுக்கிருதக் கலப்பால் இப்போதுள்ள வட இந்திய மொழிகளாக மாறியுள்ளன. *(Vide T. R Sesha Iyengar's 'Dravidian India' பக். 79)*

- கோண்டர் இன்றும் 'பூமிதேவி'யைத் **'தரைப்பெண்'** என்று கூறுகின்றனர். *(Thurston's 'Castes and Tribes of Southern India' Vol. III. பக். 372)*

- பழங்காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான திரவிட நாகரிகம் பரவியிருந்தது. *(T. R Sesha Iyengar's 'Dravidian India'. பக். 78, 79)*

- வட இந்தியாவில் சிந்து வெளியில் வாழ்ந்த திரவிடர், 8 ஓரை (இராசி)களைக் கொண்ட ஓரை மண்டிலத்தைக் கண்டுபிடித்த காலம் ஏறத்தாழ கி. மு. 5600 ஆண்டுகட்கு முற்பட்டது என ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர். *(Father Heras's Lectures at Madras and Pudukotta. 20, 21-10-1937)*

- 'ஆந்திரர்' என்னும் சொல் 'அயித்ரேய பிராமணம்' என்னும் நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளமையாலும், முதற் பாவியமாகிய வால்மீகி இராமயணத்தில் வருவதாலும், ஏறக்குறைய

கி. மு. 1000-இல் (3000 ஆண்டுகட்கு முன்), தமிழ்மொழி (பழைய திரவிடம்) வடமொழியின் கலப்பால் தெலுங்காகவும் கன்னடமாகவும் மாறின என்று தெளியலாம். (Andhra Sabdadhvam by M. Seshagiri Sastry and V G. S. Sastries's 'History of the Tamil Language'. பக். 26. Ed. 5)

o கடைக் கழகக் காலம் கி. மு. 4-ஆம் நூற்றுண்டாக இருக்கலாம். (மு. இராகவையங்கார். Vide article in the Madras University Jorunal Vol. II. 1937-38. Part II. P. 4)

o பழைய காலத்தில் தமிழ் எழுத்துகள் அல்லாமல், தனக்கெனச் சொந்த எழுத்துகள் மலையாள மொழிக்கு இருந்ததில்லை. அக் காலத்தில், மலையாளம் தனித்து நின்று இயங்க முடியவில்லை... குழந்தைப் பருவ மலையாளம் 'ஆதி மலையாளம்' எனப்படும். வாலைப் பருவ மலையாளம் 'பழைய மலையாளம்' எனப்படும். இவை இரண்டும் தமிழினின்று மலையாளம் பிரியாத காலத்தன. அக்காலத்துக்குப் (கண்ணச பணிக்கருக்குப்) பிறகே இப்போதுள்ள மலையாளம் தோன்றியது. இப்போதுள்ள மலையாளம் பண்டைக்கால நிலையிலிருந்து பெரிதும் மாற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சமசுக்கிருதத்தின் கூட்டுறவே ஆகும். பழைய மலையாளம் வழக்காற்றில் இருந்த பொழுது ஆரியராகிய நம்பூத்ரிமார் கேரள நாட்டில் வந்து வாழ்ந்திருந்தனர்; என்றுலும் இந்நாட்டு மொழியை அவர்கள் போற்றவில்லை. காலப்போக்கில், சமசுக்கிருதம் பேசி இருந்த நம்பூதிரிகளும் பழைய மலையாளம் பேசி வந்த கேரளநாட்டு மக்களும் கலந்து உறவாடிய பிறகே, இருவருடைய மொழிகளும் கலந்து உண்டாகிய ஒரு கலப்பு மொழியே இப்போதைய மலையாள மொழி. (Vide A. R. Rajaraja Varma's 'Basha Svarupam' and செந்தமிழ்ச் செல்வி. Vol. 16. பக். 392-394)

o கி. மு. 4-ஆம் நூற்றுண்டில் சமண சமயம் தமிழகத்தில் நுழைந்தது. அதன் பின்னர் கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் புத்த சமயம் இங்குப் பரவியது. சமண முனிவர்கள் மதுரையில் உள்ள ஆனைமலைப் புழைகளிலும், புதுக்கோட்டை, சேலம் மாவட்டங்களில் உள்ள மலைப்புழைகளிலும் வாழ்ந்து வந்தனர்; பௌத்தர் மதுரை, காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமூதூர் முதலிய தலைநகரங்களிலும் மடங்களை ஏற்படுத்தி வாழ்ந்தனர். அம்மடங்களுக்குப் **'பள்ளி'** என்று பெயர். அப்பள்ளியில் உள்ள **கூடத்தில்** தமிழரை அமர்த்தித் தமிழைக் கற்பித்தும் தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பியும் வந்தனர். அதன் பின்னர்தான் பிள்ளைகள் படிக்கும் இடம் **பள்ளிக் கூடம்** என்று பெயர் பெற்றது.

'கனிச்சாற்'றில் ஒரு குவளை

—**புலவர். இளவரசி:** இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.

'ஒரு நாள் வரத்தான் போகிறது' – பாடல்-1

பொருள் : மிக உயரமாகக் கட்டிய மாளிகையின் மேற்புறத்தில் உலாவ இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்பு ஏந்துகளைப் பெற்ற தூங்கும் அறைகள், தொங்குவது போன்ற அமைப்புடைய மாடிகள், ஊஞ்சற் பலகைகள், அணிக (அலங்கார) விளக்குகள், திரைச் சீலைகள், தரையில் கம்பள விரிப்புகள், விரிப்புகளிலோ பல வண்ண ஓவியங்கள். இவ்வளவு அழகான உள் அமைப்புகளுக்குள் உழைப்பைத் தமது உடைமையாகக் கொண்டு வாழும் மக்கள் குபுகுபுவெனப் புகுந்து, அச்செல்வங்களைக் கவரும் நாள் வரத்தான் போகிறது. இவ்வுலகம் பொது உடைமை ஆகத்தான் போகிறது — என்பதை ஓங்கிய செல்வர்களே உணருங்கள்.

சொற்சாரம் : ஓங்கக் கட்டிய உயர் மாளிகை என்பது பல அடுக்குகளுடன் மிக உயரமாகக் கட்டிய மாளிகை – அது பாட்டாளிகளின் ஓலைக்குடிசைகளினின்று மிக வேறுபட்டது. **உலாவக் கட்டிய** என்பது, ஏழையின் குடிசையில் உட்காரவே போதுமான இடமில்லை; பணக்காரனோ உச்சி மாடியிலே உலாவுகிறான் என்பதாம். தங்க இடம் இல்லாமல் தவிக்கும் ஏழைகள் மிகுந்த நாட்டில் தேவைக்கு அதிகமான வெற்றிடமாய்க் கிடக்கும் மாடியறைகள். வயிற்றுப் பிழைப்புக்கே நேரம் போதாத ஏழை ஒருபுறம்-பொழுதைக் கழிக்க வேண்டுமே என ஊஞ்சலாடும் செல்வர்கள் ஒருபுறம். ஒரு விளக்குக்கே எண்ணெய் வாங்க வியலாத ஏழைகள் ஒருபுறம்-மாளிகை முழுதும் பல விளக்குகள். உடுக்க மாற்றுடை இல்லாத ஏழைகள் ஒருபுறமிருக்க இங்குப் பலகணித்திரைகள் பாங்குடன் அசைகின்றன. அழகுக்கு அழகு செய்வது போல மாளிகையினுள்ளே பல வண்ண ஓவியங்கள் நிறைந்த தரை விரிப்புகள்-மிக விலை மதிப்புள்ள அவ்விரிப்புகளுக்காகச் செலவிட்ட தொகையில் பல ஏழைகள் உடுக்கலாம்; படுக்கலாம்.

மாளிகைக்குச் செல்வதற்கு முன் கூட பாவலர்க்கு இவ்வெண்ணங்கள் ஏற்படவில்லை. உள்ளே சென்று ஆரவார அமைப்புகளைக் கண்ட பின்னர்தான் அவருக்கு இவ்வெண்ணம் தோன்றியிருக்கிறது. ஏழைகளின் குடிசையையும்-இம் மாளிகையையும் ஒப்பு நோக்கி உள்ளம் குமுறும் இவரது வாய் முணுமுணுக்கிறது. இந்த இடத்தில் பாட்டாளிகளின் கூட்டம் குபுகுபுவெனப் புகுந்து பொதுவுடைமையாக்கும் அந்த நாள் வரத்தான் போகிறது.

2-ஆம் பாடற் பொருள் : பூங்காவில் பல வகையான பூக்கள் மலர்ந்துள்ளன. உண்ணக்கூடிய கனிகளும், காய்கறிகளும்

விளைந்து கிடக்கின்றன. ஊற்று நீரை இறைக்கும் குளங்களும் அவற்றின் நடுவே அழகான சிலைகளும் உள்ளன. அதையொட்டிப் பரந்த புல்வெளி-பரந்த தோட்டம்-தோட்டங்களில் தாவி விளையாடும் மான்குட்டிகள்-தோகையை விரித்து ஆடும் மயில்கள்-இப்படிப்பட்ட இடத்தில் வாழ்கின்ற செல்வர்களோ இரண்டொரு பேர் தாம். இதைக் கண்ட மெலிந்த ஏழைகள் அப்பூங்காவில் புகத்தான் போகின்றார்கள். அப்படி ஒரு நாள் வரத்தான் போகிறது.

சொற்சாரம் : மாளிகையைக் கண்டு மனம் கனன்ற பாவலர் சிறிது வெளியே வருகிறார். அங்கே வகை வகையான பூக்கள் பூங்காவில் மலர்ந்து கிடக்கின்றன. பயன்படு பொருள் அல்லாத அழகுப் பொருள்கள் தேவைதாமா? என்ற எண்ணம் பாவலரின் உள்ளத்திலே தோன்றுகிறது. புதுப்புதுப் பழவகை, காய்கறி விளைச்சல்-பல ஏழைகளுக்கு உணவாகும் பழங்களும், காய்களும் உண்பாரின்றி விளைந்து கிடக்கின்றன. செதுக்கிய சிலைகள்-செயற்கையாக செய்யப்பட்ட தூவு நீர் வாவிகள், சிலைகள், பல ஆயிரங்களை விழுங்கிக் கொண்டு நிற்கின்றன. அத்தொகையில் ஒரு தொழிற்சாலை தொடங்கினால் பல ஏழைகளுக்கு வேலை வாய்ப்பும், நாட்டிற்கு வருவாயும் கிடைக்கும். நீண்ட புல்வெளி-பரந்த தோட்டம்-இவை அமைந்துள்ள இடங்களில் விளை பொருட்களை பயிர் செய்தால் நலம் பயக்குமே என எண்ணுகிறார். இப்படி எண்ணிப் பெருமூச்சு விடும் வேளையிலே அத்தோட்டத்தில் மான்கள் துள்ளி விளையாடுகின்றன. மயில்கள் தோகை விரித்தாடுகின்றன. அதைக் கண்ட பாவலரின் மனத்தில் எண்ணங்களும் துள்ளி எழுகின்றன. இரண்டொரு பேர் வாழும் இந்த மாளிகை-அதன் பின்னே இவ்வளவு நீண்ட பரப்புள்ள பூங்கா இவை தேவைதாமா? இல்லை தீமைதான் என அவர் மனம் ஓலமிடுகிறது. அம் மாளிகையின் எதிர்ப்புறத்தில் வாழும் ஏழைகள் கண்ணில்படுகின்றனர். இவர்கள் இப்பூங்காவில் புகுந்து இவற்றைத் தங்கள் உடைமையாக்கிக் கொள்ளும் நாள் வரத்தான் போகிறது என எண்ணியவர் செல்வர்களை அழைத்துத்தான் கூறுவதைச் சற்று எண்ணிப் பாருங்கள் என எச்சரித்து உணர வைக்கிறார்.

3-ஆம் பாடலின் பொருள் : மாளிகையைக் கட்டிய ஏழைகள் உடுக்க உடையின்றிப் பாதையில் படுத்து உறங்குகின்றார்கள். எதிர்புறத்திலுள்ள மாளிகையிலோ ஆயிரம் ஏவலாட்கள் பணி புரிகின்றனர். அவர்களது பொழுது போக்குக்கென மயில்கள் போன்ற பெண்கள் நடனமாடுகின்றனர். இம்மாளிகையிலே அழைப்பில்லாமலேயே ஏழைகள் புகும் நாள் வரத்தான் போகிறது. உழைப்பில்லாத செல்வர்களே உணருங்கள். அப்படி ஒருநாள் உலகம் பொதுவுடைமை ஆகத்தான் போகிறது.

சொற்சாரம்: ஏழைகளைக் கண்ணுற்று நின்றபாவலர் உள்ளேயும் வெளியேயும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். பளிங்குக் கற்களால் இம் மாளிகையை இழைத்துக் கட்டிய ஏழைகள் படுக்க இடமின்றி, உடுக்க ஆடையும் இன்றி, பாதையிலே உறங்குகின்றனர். பாவலரின் உள்ளம் அசை போடுகிறது. உள்ளே இரண்டொரு பேர்க்கு ஆயிரம் ஏவலாட்கள்-அடிமைகள் போல் கைகட்டி நிற்கின்றனர். போதிய உழைப்பின்மையால் உறக்கம் வாராத பொழுதுகளைக் கழிக்க நாட்டியப் பெண்கள்-இவை தேவைதாமா? இல்லை இல்லை. செல்வர்களே உங்கள் மாளிகையிலே இன்று வாயைப் பிளந்து நிற்கும் ஏழைகள் திமுதிமுவெனப் புகும் நாள் வரத்தான் போகிறது-என்பதை இன்றே உணருங்கள் என்கிறார்.

4-ஆம் பாட்டின் பொருள்: மாளிகைச் செல்வர்கள், தெவிட்டுகின்ற நெய் உணவையும், சுவை மிகுந்த பழச்சாறுகளையும் உண்ணுகின்றனர். ஒவ்வொரு நாளும் புத்தாடை புனைகின்றனர். பொழுதை இன்பமாக கழிக்க பல கலை நிகழ்ச்சிகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுகின்றனர் வெளியூர்களுக்குத் தங்கள் மகிழுந்துகளில் உலாச் சென்று வருகின்றனர். தாங்கள் காணும் உலகத்தைப் பற்றி ஒருவருக்கொருவர் செருக்காக எக்காளமாகச் சிரிக்கின்றனர், பேசிக் கொள்கின்றனர், நல்லது நல்லது என. இப்படிப்பட்ட இடங்களெல்லாம் துன்புற்ற ஏழைகள் திடுதிடுவெனப் புகும் நாள் வரத்தான் போகிறது. ஏழை மக்களோடு ஒன்றிப் போகாத செல்வர்களே, நினைத்துப் பாருங்கள் இந்த உலகம் பொதுவுடைமை ஆகத்தான் போகிறது.

சொற்சாரம்: மாளிகையையும், பூங்காவையும் பார்த்துப் புகைந்த பாவலரின் மனக்கண் முன்னே செல்வர்கள் தெரிகிறார்கள்-அவர்களது உணவு வகை தெரிகிறது. தெவிட்டுகின்ற நெய்யால் செய்யப்பட்ட பலவகை உணவுப் பொருட்கள்-அதோடு கூட மிகு சுவை மாங்கனியின் சாறு-இவற்றை உண்டு கொழுத்த உடல்களுக்கு ஒவ்வொரு நாளும் புதுப் புதுப் பட்டு ஆடைகள். மகிழ்ச்சியாக நாளைப் போக்க, கலை நிகழ்ச்சிகளையும் கேளிக்கை நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தல்-இதுவும் போதாதென்று தங்களது மகிழுந்துகளிலே உலாச் சென்று வருதல். இவ்வளவு இன்பங்களைத் துய்ப்பதனால் செருக்கான சிரிப்புகளும், ஏழைகளைக்கண்டு எக்காளப் பேச்சுகளும் அவர்களுக்குள்ளே நிகழ்கின்றன. இவற்றையெல்லாம் தம் மனக் கண்முன் கண்ட பாவலர் கூறுகிறார். இவ்வாறு நீங்கள் நடந்து கொள்வது நல்லது; நல்லதுதான்! உங்களது செல்வக் கொழிப்பால் துன்புறும் ஏழைகள் திடுதிடுவென புகும் நாள் விரைவில் வரத்தான் போகிறது. மாந்தனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இவ்வுலக இன்ப துன்பங்களைத் துய்க்க உரிமையுடையவன்-என்பதை உணராமல் இன்பத்தை மட்டும் நீங்களும் துன்பத்தை மட்டும்

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)

வள்ளுவரின் வாய்மையும் பொய்யாமையும்

—சி. அரசிறைவன், அறி. இ. தஞ்சை.

சொல் உலகம் :

உலகில் எல்லாரும் சொல்வல்லவர்களாகவும், ஆராய்ந்த சொல்வன்மையுடையவர்களாகவும் விளங்கவில்லை. கசடறச் சொல் தெரிதலும், சொல்லின் தொகையறிதலும் நன்கு கற்றமைந்த அறிஞர்களுக்கே ஒல்லுவது. எனவே, சொல் ஆளுமை சரிவரக் கைவரப் பெறுதவர்கள் சொலமாட்டாமையால் மெய் பொய்யாவதும், சொல்வன்மையுடையவர்களின் சொல்வன்மையால் பொய் மெய்யாவதும் அன்றாட வாடிக்கையாகி விட்டது. இதையுணர்ந்த நறுந்தொகை ஆசிரியரும்,

> 'பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
> மெய் போலும்மே மெய் போலும்மே' —73
> மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
> பொய் போலும்மே பொய் போலும்மே —74

என்றும் மொழிந்தமைந்தார்.

சொல்லும் பயனும் :

மெய் பொய் என்பனவற்றை சொல்லளவில் பொருள் கொள்வதோடு, விளையும் பயனைக் கொண்டும் முடிவு செய்ய வேண்டுமென்பதே சரியான உலகியல் நெறியாகும். வள்ளுவரும் சொல்லுக சொல்லிற் பயனுடைய(*200*) என்றும், பிறர் சொல் பயன்கோடல் (*646*) என்றும், முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல் (*676*) என்றும், பயன்பற்றிக் கருத்தறிவிப்பார். மேலும், சொல்லுகின்ற சொற்களைக் காட்டிலும் சொல்பவரின் தன்மையையும் உள்நோக்கத்தையும் காண வேண்டும். நட்டார் போன்ற ஒட்டார் (*826*) சொல்லையும், உருதவர் போன்ற உற்றவர் (*1096*) சொல்லையும் குறிப்பாக உணர வேண்டுமென்கிறார் வள்ளுவப் பெருமகனார்.

> நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
> சொல் அளவு அல்லாற் பொருளில்லை—(நாலடியார் 195)

என்ற பாடலும் இம் முடிவிற்கு அரண் செய்வதைக் காண்க!

பொருள் வேறுபாடுகள் :

> 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'—தொல் 640.

என்றார் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார். ஒரு பொருளுடைய் பல சொற்கள் இருந்தாலும் அவற்றிடையே நுட்பமான பொருள் வேறுபாடுகள் இருக்கவே செய்யும். நுண்மாண் நுழைபுலந்தான்

அவற்றிற்குச் சரியான விடையைத் தேடித்தரவல்லது. வள்ளுவர் பொருள் பொதிந்த சொற்களை மிகப் பொருத்தமாக ஆள்வதில் வல்லவர். பொய்யாமை, உண்மை, வாய்மை, மெய்ம்மை ஆகிய 4 சொற்களும் ஒரு பொருளுடைச் சொற்களாகத் தோன்றும்! ஆனால், அவற்றிடையே உள்ள நுட்பமான வேறுபாடுகளை நுனித்தறிந்து வள்ளுவர் எடுத்தாண்டுள்ளதை இனி ஆராய்வோம்.

பொய்யாமை :

உள்ளத்திலும் உரையிலும், செயலிலும் 'பொய்' இன்றி இருத்தல் பொய்யாமை எனப்படும்.

மனம் அல்லது உள்ளத்தால் பொய்யாமை —உண்மை
வாயால் அல்லது சொல்லால் ,, —வாய்மை
மெய்யால் அல்லது செயலால் ,, —மெய்ம்மை

எனவே, உண்மை, வாய்மை, மெய்ம்மை ஆகிய மூன்றையும் உள்ளடக்கி நிற்கும் ஒரே சொல் பொய்யாமை என்றாகிறது. பொய்யாமை என்ற சொல்லாட்சி குறளில் 6 இடங்களில் வருகிறது. வாய்மை சொல் முறையோடு தொடர்பு கொண்டிருக்க, பொய்யாமை முழுக்க முழுக்க செயல் முறையோடு தொடர்பு கொண்டிருக்கிறது. ஒழுக்க நிலையில், செயலில் 'வாய்மையாக நட' என்று வள்ளுவர் சொல்லவில்லை. மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு (595) என்பதால், உள்ளத்தால் பொய்யாது ஒழுக வேண்டும் என்று தெளிவு செய்கிறார்.

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்' — 294.

இச் செயல் முறையையே, கடவுள் வாழ்த்திலும், 'பொய்தீர் ஒழுக்க நெறி, (6) என்று வலியுறுத்தினார். பொய் ஒழுக்கத்தை, பொய்த்துயிர் வாழ்தல் (183) என்பதைவிட, சாதல் அறம் கூறும் ஆக்கத்தைத் தரும் என்று இடித்துச் சாடுகிறார்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று—297:

படிப்பதற்கு, இக்குறள் எளிமையாகத் தோன்றினும், இதன் பொருள் ஆழமானது. சொற்களை அடுக்குத் தொடராக அடுக்கியுள்ளார். பரிமேலழகரும்; 'அடுக்கு இரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று; ஏனையது துணிவின் மேற்று' என்றார். ஆனால், வெறும் அழகு நோக்கி கூறியது கூறிக் குற்றப்படும் போலிப் புலவரல்லர் வள்ளுவப் பெருந்தகை! பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லாத தொல்கேள்விப் பல்லாணை நல்லாசிரியர் ஆவார். சொல்லிற் பயனுடையவற்றை, வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து சொல்லும் பெற்றியர். ஆக, அவர்தம் ஒவ்வொரு சொல்லிற்கும், ஏன் எழுத்திற்கும் கூட பொருள் உண்டு.

மேற்கண்ட குறளில் முதல் 'பொய்யாமை' பொய்யாமையாகிய அறத்தை என்றும், இரண்டாவது 'பொய்யாமை' மனம் மொழி மெய்களால் தவறுது (பொய்த்தல்—தவறுதல் ஒ. நோ: வானம் பொய்த்து விட்டது) என்றும், ஆற்றின் என்பது உரிய நெறியில் போற்றி வாழ முடிந்தால் என்றும், பொருள் படும். செய்யாமை செய்யாமை என்ற 2 எதிர்மறைச் சொல் செய்தல் என்ற உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

'அறம்பிற' என்றது பிற அறம்; முன்பின் தொக்கது. பிற அறம் என்றால் எந்த அறம்? அதுதான் கொல்லாமை!

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று – 322.

நன்று என்ற சொல் நன்மை (111), அறம் (38) ஆகிய இரு பொருளையும் தரும்.—குறளின் திரண்ட பொருளை இனி தொகுத்துப் பார்ப்போம்– பொய்யாமையாகிய அறத்தை மனம் மொழி மெய்களால் தவறுது உரிய நெறியில் போற்றி வாழ்வதுடன் கொல்லாமையாகிய அறத்தை, பொய்யுரையாகிய கரிசினைத் தவிர்த்துச் செய்வதால் அறமும் நன்மையுமாகும்.

பொய்யாமையா? கொல்லாமையா?

வாய்மை அதிகாரத்தில் பொய்யாமையை உயர்த்தியும் (296) கொல்லாமை அதிகாரத்தில் கொல்லாமையை (322) உயர்த்தியும் வலியுறுத்திச் சொல்வார். ஆதலால் இவற்றில் தலைசிறந்த அறம் எஃது என்ற வினா எழுவது இயல்பே!

297, 323 ஆகிய இரு குறட்பாக்களையும் 'நன்று' என்று முடித்திருக்கும் பொருத்தமும் நுட்பமும் எண்ணி இன்புறத்தக்கது. இவ்விரு குறள்களையும் இணைத்துப் பார்த்தால் ஓர் உண்மை புலனாகும்.

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்—296.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்று அதன்
பின்சாரப் பொய்யாமை நன்று—323.

இதனின்றும் தலைசிறந்த அறங்கள் இரண்டு என்று அறிகிறோம். பொய்யாமையினும் சிறந்தது கொல்லாமையே. எனவேதான் ஒன்றாக நல்லது கொல்லாமை என்று கூறியதோடு, கொல்லான் புலாலை மறுத்தானை (269) எல்லா உயிரும் வணங்கும் என்று தெளிவு செய்கிறார். இதனையுணர்ந்துதான்,

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே –(பரா 192)

என்று தாயுமானவரும்,

உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்களெல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புறவினத்தார்
- (அருள்விளக்கமாலை 11)

என்று வள்ளலாரும் கொல்லாமையின் முதன்மையை வலியுறுத்திச் சென்றனர்.

உண்மை :

உண்மை, என்ற சொல் உள்ளதாகும் தன்மை என்ற பொருளை யும், நிகழ்ந்தது கூறல் என்ற பொருளையும் தரும். உள்ளதாகுந் தன்மை என்ற பொருளில் 3 இடங்களில் (373, 572, 1212) ஆண்டுள்ளார். வாய்மை அதிகாரத்தில் இச் சொல் ஆளப் பெறவே யில்லை.

ஆனால் தன்னெஞ்சறிவது பொய்யற்க (293), உள்ளத்தால் பொய்யாது (294) என்ற இடங்களில் உண்மையை குறிப்பாகச் சுட்டுகிறார்.

மெய்ம்மை :

என்றும் மாறாத, ஆராய்ந்து கண்ட நிலையான உண்மைகள் மெய்ம்மை என்ற பெயர் பெறும். தாம் ஆராய்ந்து கண்ட நிலை யான உண்மைகளுள், என்பதை வள்ளுவர் 'யாம் மெய்யாக் கண்ட வற்றுள்' என்று குறிப்பிடுகின்றார். மெய்ம்மை என்ற சொல்லாட் சிக்குப் பகரமாக மெய் என்ற சொல் 7 இடங்களில் ஆளப்பட் டுள்ளது. இச்சொல் மெய்யறிவியலுடன் தொடர்புடையது; ஆகை யால் மெய்யுணர்தல் அதிகாரத்தில் வாய்மை, உண்மை ஆகிய சொற்கள் ஆளப்பெறவே இல்லை.

வாய்மை :

வாய்மை என்ற சொல்லாட்சி 9 இடங்களில் வருகிறது. வாய் என்பதற்குச் சொல் என்ற ஒரு பொருளும் உண்டு. ஒ-நோ : வாயுறை-சொல்லாகிய மருந்து. இதிலிருந்து, வாய்மை என்பது மொழி (சொல்) நிலையோடு மட்டும் தொடர்புடையது என்ற உண்மை புலனாகிறது. வாய்மைக்கு வள்ளுவர் தரும் இயல்வரை என்ன?

வாய்மை— (i) தீமையிலாத உண்மை (நிகழ்ந்தது கூறல்)
—(ii) புரைதீர்ந்த நன்மை பயக்கும் பொய்மை
(நிகழாதது கூறல்)

எனவேதான், வள்ளுவர் பொய்மைக்குத் தனி அதிகாரம் வகுக்க வில்லை போலும்! கல்வி × கல்லாமை, அறிவுடைமை × புல்லறி வாண்மை, செங்கோன்மை × கொடுங்கோண்மை, நட்பு × தீ நட்பு போன்ற அதிகாரங்களை வகுத்தவர், பொய்மைக்கு வகுக்கவில்லை.

புரைதீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மையும் வாய்மையாகி விடுவதால். வள்ளுவர் கண்ட வாய்மைக்கு எதிர்ச் சொல் கிடையாது! பொய்மைக்கு எதிர்ச் சொல் மெய்ம்மை (மெய் × பொய்) என்பதனையும் ஓர்க.

புரைதீர்ந்த நன்மை பயக்கும் என்றது யாருக்கு? தனக்கு நன்மை பயப்பதையா? இல்லை, பிறருக்கு. மொழிஞாயிறு பாவாணர் அவர்களும் இத்தொடருக்கு உரை எழுதும்போது, 'குற்றமற்ற நன்மையைப் பிறர்க்கு விளைக்குமாயின்' என்று குறித்துள்ளார்கள். இல்லையெனில், தன்னலம் கருதி (நன்மை தனக்கு விளைக்குமாயின்) பொய் கூறுவாரன்றோ! இவ்வரம்பால், தன்னலம் கருதிப் பொய் கூறுதல் விலக்கப்படுகிறது.

இங்கே பிறிதொரு நுட்பத்தைப் புலப்படுத்தி விடுவது நலம் பயக்கும். பொய்ம்மையும் வாய்மை இடத்த என்றார். பொய் எல்லாம் வாய்மை இடத்த என்று சொல்லவில்லை. 'உம்' சிறுபான்மைக் குறிப்பினைக் காட்டுகிறது. இதே போன்று நல்லவை எல்லாஅந் தீயவாம் (375) என்று சொன்னவர், தீயவை எல்லாம் நல்லவாம் என்னுது, தீயவும் நல்லவாம் என்று உம்மைக் கையாள்வார்.

மேலும், 'வாய்மை இடத்த' என்பதால் பொய்மை எக்காலும் எவ்விடத்தும் வாய்மை ஆகிவிடாது! நன்மை பயப்பதால், வாய்மைப் போலியாகலாம். 'எனின்' என்ற சொல் இன்மை சுட்டும் சொல். பொய்மை நன்மை பயக்கும் என்று வள்ளுவர் யாண்டும் கூறுததையும் சிந்தித்து உண்மை தெளிவாராக.

அதிகாரத் தலைப்பு:

வாய்மை அதிகாரத் தலைப்பை வள்ளுவர் மிகவும் எண்ணி அமைத்துள்ளதாகத் தெரிகிறது. வாய்மைக்கு முதலிரண்டு குறள்களில் இலக்கணம் கூறி இறுதிக் குறளில் மிகுந்த உயர்வு தருகிறார்.

இருப்பினும், அவர் உள்ளம் வாய்மையினும் உயர்ந்த பொய்யாமையின் சிறப்பை உணர்த்தியிருப்பது ஆராய்தற்குரியது. யாமெய்யாக் கண்டவற்றுள் என்று கூறிய வள்ளுவரே பொய்யாமை அன்ன புகழில்லை என்றும், பொய்யா விளக்கே விளக்கு என்றும் பின்சாரப் பொய்யாமை நன்று என்றும், உயர்த்தி உரைப்பதுடன் வாய்மை அதிகாரத்தில் 'பொய்யாமை' பற்றிச் செம்பாகமாக 5 குறள்கள் யாத்துள்ளார்.

அவர்தம் உள்ளம் 'பொய்யாமை' என்ற தலைப்பினையே இட விழைந்திருக்கும்! ஆனால், உலகியல் கூறிப் பொருள் இதுவென்ற வாயுறை மருத்துவராம் வள்ளுவர், 'வாய்மை' என்ற 'உலகியல்' தலைப்பையே இட்டார். பொய்யாமையை வெளிப்படையாக வலி யுறுத்தி அதிகாரத் தலைப்பு இட்டிருப்பின் இஃது உலகியல் நடை முறைக்கு ஒவ்வாது என்று விலக்கி விடுவர். இதையுணர்ந்துதான் உலகியலையொட்டி வாய்மைக்குப் புதிய இலக்கணம் வகுத்தார்.

பொய் நீக்கி, மெய் உணர்ந்து, வாய்மை மொழிந்து பொய் யாமை நெறியில் நின்று செயலாற்றி வாழ்வாங்கு வாழ்வோமாக!

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955,)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1.	வெளியிடும் இடம் :	**சென்னை**
2.	கால முறை :	**திங்கள் ஒருமுறை**
3.	அச்சிடுவோர் பெயர் :	**திருவாட்டி, மா. தாமரை**
	இனம் :	**தமிழர்**
	முகவரி:	**தென்மொழி அச்சகம், சென்னை-5.**
4.	வெளியிடுவோர் பெயர் :	**திரு. பெருஞ்சித்திரனார்,**
	இனம் :	**தமிழர்**
	முகவரி:	**தென்மொழி அச்சகம், சென்னை-5**
5.	ஆசிரியர் பெயர், முகவரி :	**திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5**

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்	**திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5**

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் தானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன.

15—2—1980
சென்னை-5

—பெருஞ்சித்திரன்
(ஒப்பம்.)

தமிழக ஆளுநர்க்குக் கண்டன மடல்

ஒரு மக்களினத்தின் இலக்கியத்தை, பண்பாட்டை, மொழியை மதிக்காத ஒருவர் அம் மக்கவினத்தை ஆள்வது அரசியல் அறமாகாது.

(அண்மையில் தமிழக ஆளுநர் திரு. பிரபுதாசு பட்வாரி அவர்கள் சமசுக்கிருதத்திற்குப் படிநிகராளி போல் தம வாய்க்கு வந்தவாறு அம்மொழியைப் பலபடப் பாராட்டியும் அதன் வழித் தமிழ்மொழியை மறைமுகமாகத் தாழ்த்தியும் ஆங்காங்கே பேசி வருவதைக் கண்டித்துப் பல்லடம், திருக்குறள்மன்றத்தினர் ஆங்கிலத்தில் ஒரு நேரடி மடலை ஆளுநர்க்கு விடுத்து, அம் மடலின் படிகளை **இந்தியன் எக்சுபிரசு** ஆங்கில இதழ்க்கும், **தென்மொழிக்கும்** விடுத்துள்ளனர். அம் மடலின் பெயர்ப்பைக் கீழே வெளியிட்டுள்ளோம். ஆங்காங்குள்ள தென்மொழியன்பர்களும், தமிழ்ப் பற்றுளர்களும், தமிழ் வளர்ச்சி மன்றங்களும், கழகங்களும், பிற தமிழின நல் அமைப்புகளும். இது போலும் கண்டன மடல்களைக் கூட்டாகவும், தனியாகவும், தீர்மானங்கள் வழியாகவும் ஆளுநர்க்கு உடனடியாகத் தெரிவிப்பதுடன், அவற்றின் படிகளையும் தென்மொழிக்கு விடுத்து வைக்கக் கேட்டுக் கொள்கிறோம். இவ்வகையில் ஓர் ஆயிரம் மடல்களேனும் ஆளுநர்க்குப் போவது, அவரை இவ்வகையில் நடுநிலையுடன் கருதிப் பார்க்கத் தூண்டுவதாகும் என்று கேட்டுக் கொள்கிறோம். ஆ-ர்..)

விடுதல் :
திருக்குறள் மன்றம்,
பல்லடம் – 638 664,

பெறுதல் :
மேதகு பிரபுதாசு பட்வாரி.
தமிழக ஆளுநர், கிண்டி, சென்னை,

மதிப்பிற்குரிய ஐயா,

தாங்கள் சென்ற **18-2-80-**இல் திருவரங்கத்தில் மதுராந்தகம் வீரராகவாச்சாரியரின் **81-**ஆம் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரையினை இந்திய விரைவானில் **(Indian Express)** படித்தறிந்தோம். **'சமற்கிருதமே உலகின் வளமான மொழி; அதற்கு ஈடும் இணையுமான மொழி ஒன்றில்லை. பிற மொழிகள் நிறைகுறையுடையன;** சில அழிந்துபட்டன' என்னும் இத் தவறான கருத்து கண்டிக்கப்படுவதுடன் அதன் விளக்கமும் அளிக்கப் பெறுகின்றது. தேவைப்படின் நீண்ட விளக்கமளிப்போம்.

சமற்கிருதம் மக்களால் என்றும் பேசப்படாத ஓர் அரைச் செயற்கைக் கலவை மொழி என்பதையும், ஏறத்தாழ கி. மு. **5-**ஆம் நூற்றாண்டளவில் தோற்றுவிக்கப் பெற்ற மொழி என்பதையும், வேதகால ஆரியர் பேசிவந்த ஆரியமொழி அழிந்து போன பின் பிராகிருதம் (வட திரவிடம்) பாலி மொழிகளினின்று தோற்றுவிக்கப் பெற்றதென்பதையும் மறைமலையடிகள், பாவாணர் போலும் மொழி வரலாற்றறிஞர்கள் ஆய்ந்து புலப்படுத்தியுள்ளனர்.

பாவாணர் அவர்கள் சமற்கிருதத்தில் ஐந்திலிருபகுதி மேலை ஆரியச் சொற்களும் ஐந்திலிருபகுதி தமிழ் வேரினின்று திரிந்த சொற்களும் ஐந்திலொருபகுதி இடுகுறிச் சொற்களும் உள்ளன என்று தம் நுண்மாணுழைபுல வன்மையில் முற்ற ஆய்ந்து முடிவு கட்டியுள்ளார்.

மேலும் திணை, பால், எண், இடம் ஆகிய இலக்கணக் கூறுகள் சமற்கிருதத்தில் தெளிவாக இல்லையென்றும் மொழி அறிஞர்கள் கூறுகின்றனர்.

சமற்கிருதத்தின் உண்மை வரலாறிவ்வாறிருக்க தமிழையே அறியாத நீவிர், 'சாவுப் படுக்கையிலுள்ள தந்தைக்கு மகன் படிக்கத் தக்க நூல்கள் தமிழில் இல்லை' யென்று கூறுவது எங்களுக்கு நகைப்பையூட்டுகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை, ஏன் இறந்த பின் கூறப் பெறும் ஒப்பாரி இலக்கியம் வரை பாடலாலேயே தம் உணர்வைப் புலப்படுத்தும் வன்மையுள்ளது தமிழ்மொழி.

மறைமலையடிகள் போலும் மொழிப் பேரறிஞர்களின் முயற்சி யின் பயனுய் சமற்கிருதத்தின் உண்மை வரலாற்றை நாங்கள் நன்கறிந்து கொண்டோம். இனியும் உங்களைப் போன்று அதி காரத்திலுள்ளவர் என்ற ஒரே காரணத்திற்காகக் கதைப்பதும், அதனைப் பிராம்மணிய இதழ்கள் பெரிதும் விளம்பரப்படுத்துவதும் இத்தமிழகத்தில் செல்லுபடியாகாது என்பதை மட்டும் சொல்லி வைக்கிறோம்.

இரண்டரை ஆண்டுகளாக ஆளுநராகவிருந்தும் எங்கள் இலக்கியச் செல்வத்தின் பெருமையுணராத நீங்கள் ஒன்றால் அறியாமையுடையவர்; அன்றால் உணர்ந்தும் ஏற்றுக் கொள்ளும் நல்லெண்ணமில்லாதவர். அறியாமையாயின் தமிழக அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் திட்டத்தின் நெறியாளர் தேவநேயப் பாவாணர் போலும் அறிஞர் வழி உண்மையறிந்து தங்கள் கருத் தைத் திரும்பப் பெறல் வேண்டும். இரண்டாமவராயின் நீங்கள் ஆளுநராகத் தொடரத் தக்கவரல்லர். ஒரு மக்களினத்தின் இலக்கி யத்தை, பண்பாட்டை, மொழியை மதிக்காத ஒருவர் அம் மக்க ளினத்தை ஆள்வது அரசியல் அறமாகாது.

எங்கள் கண்டனத்தைப் புலப்படுத்துவதுடன் வேண்டுகோளுக் குச் செவி மடுப்பீர் என்று நம்புகிறோம். தங்கள் உண்மையுள்ள

, (ஒப்பங்கள்) தலைவர்: **மா. ஆறுமுகம்**

செயலர்: **ந முத்துக்குமரன்,** பொருளாளர்: **கி. சுந்தரம்.**

பல்லடம்,
3-3-80

திருக்குறள் மன்றம்,
11, காந்தி சாலை, பல்லடம்-638 664.

படிகள். 1. ஆசிரியர், இந்திய விரைவான், (Indian Express)
2. ஆசிரியர், 'தென்மொழி' மாத இதழ்.

தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்புகள்

பன்மொழிப்புலவர். இரா. மதிவாணன் க. மு.

பழந்தமிழரின் கடல்வழிச் செலவுகளும் கண்டுபிடிப்புகளும்

குமரி நாட்டுப் பழந்தமிழர் ஞாலமுதல் நாகரிகத் தொன்மையர். சீனரின் மஞ்சளாற்று நாகரிகம், சுமேரியரின் யூபிரடசு தைகிரிசு ஆற்று நாகரிகம், எகுபதியரின் நீலாற்று நாகரிகம் ஆகியவை தி மு. 5000 அளவில் முகிழ்த்து தி. மு. 3000 அளவில் சிறப்புற்றெளிர்ந்தவை. குமரி நாட்டுத் தமிழரின் பஃறுளியாற்று நாகரிகம் தி. மு 10000 ஆண்டளவிலேயே ஞால முதல் அடிப்படை நாகரிகமாக மலர்ந்திருந்தது.

இன்றைய வரலாற்றறிஞர் பலரும், மார்கோபோலோ *(1271-95)*, இபின்பதூதா *(1324-55)*, கொலம்பசு *(1492-93)*, வாசுகோடகமா *(1497-99)*, பொகல்லன் *(1519-22)*, தலைமகன் *(Captain)* குக்கு *(1768-80)*, ஆகியோரின் துணிந்த நெடுவழிச் செலவுகளைப் பாராட்டி வியக்கின்றனர். உலக வரலாற்றில் முதன் முதல் கடலில் கலஞ்செலுத்தி அளப்பரும் கண்டுபிடிப்புகளையும் கடற்போர் வென்றிகளையும் குவித்த குமரிநாட்டுத் தமிழரின் வரலாறு வெளியுலகிற்குத் தெரியாவண்ணம் ஆழ்கடலுள் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

உலகத் தொன்மொழிகளனைத்திலும் கடல் மற்றும் கடலோடும் கலங்களின் பெயர்கள் தமிழ் வேர்ச் சொற்களினின்றும் தோன்றியனவாக இருப்பதே இக்கருத்தை நிறுவ வல்லதாகும். வடிம்பலம்ப நின்ற நெடியோன் என்னும் குமரிநாட்டுத் தமிழ் வேந்தன் கடல் வழிக் கலஞ்செலுத்தி அக்கரை நாடுகளை வென்ற கொற்றவனுகப் போற்றப்படுகிறான். இவன் பஃறுளியாற்றுத் தென்மதுரை கடல் கொள்ளப்படு முன் வாழ்ந்த தலைக்கழக காலத்து மன்னன். இவன் தலைக்கழக காலமாகிய தி. மு. 10,490 — தி. மு. 6050 வரைப்பட்ட கால எல்லையில் வாழ்ந்தவன். வடிம்பலம்பநின்ற நெடியோன் என்னும் இம் மன்னனின் பெயரிலிருந்து எல்லை காண முடியாது என்று கருதப்பட்ட கடலைத் துணிந்து கடந்து, மறுகரை காண வேண்டும் என்னும் அவா நிறைவுற்றுத் தன் பாதத்தை அக்கரைக் கடலலைகள் அலம்ப நின்று, கொலம்பசு போன்று புதிய நாட்டைக் கண்டான் என்பதே தெளிவான பொருளாகிறது.

அக்காலத்திய ஞால அமைப்பின்படி கிழக்கில் ஆத்திரேலியாவின் தொடர்ச்சியாக நீண்டிருந்த மலேயா பர்மா நிலப் பகுதியையோ அல்லது குமரிநாட்டின் மேற்கிலிருந்த ஆப்பிரிக்காவின் கடைகள் தோறும் சென்று கேட்டுக்கொண்டும் மொழி பெயர்த்தும்

கிழக்குக் கடற்கரை நிலப் பகுதியையோ நெடியோன் முதன் முதல் கண்டவனுதல் வேண்டும். தென்னுப்பிரிக்காவுக்கும் குமரி நாட்டுக்கும் இடையிலிருந்த கடல் தொலைவு அத்துணைப் பெரிதன்று. நெடியோனுக்கு முன்பே பலர் தென்னுப்பிரிக்காவுக்குச் சென்று வந்திருத்தல் வேண்டும். அதனுற்றுன் ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடை இன்றளவும் குறிஞ்சிநிலக் கடவுள் வழிபாடான முருக வழிபாடு நிலவி வருகிறது. தமிழகத்தின் மேற்கில் மேற்கு மலைத் தொடர்ச்சி இருப்பது போன்றே குமரிநாட்டிலும் மேற்றிசையில், குமரித் தொடர், பன்மலைத் தொடர், பஃறுளி பெருமலைத் தொடர் ஆகிய நெடுமுடி மலைத் தொடர்கள் பலவாக இருந்தன. கடலுள் முழ்கிய குமரிநாட்டு பெருமலைத் தொடர்கள் இன்றும் தொடர் அருமல் இந்துமாக் கடலுக்கடியில் இருப்பதை, இந்திய கடல் மற்றும் நிலப்பட, அளவீட்டுத் துறையினரின் இந்துமாக் கடலடிப் படத்தில் தெளிவாகக் காணலாம். ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடை முருக வழிபாட்டைப் பரப்பியவர் யார்? அஃது எக்காலத்துப் பரவியது என்னும் விஞக்கள் குமரிநாட்டுத் தமிழரின் நாகரிகத் தொன்மைக்கும் கடலோடும் தொழிற்றிறனுக்கும் தக்க விடையளிப்பனவாகும்.

ஆத்திரேலியப் பழங்குடிகளுக்கு உழவுக் கருவிகள் தந்து ஏர் உழுது பயிர் செய்யும் கலையைக் கடலில் மேற்றிசையிலிருந்து வந்தவர் கற்பித்ததாக சோவியத்து வரலாற்று ஆசிரியர் கோந்தர கோவு தன் முக்கடல் புதிர் (The Riddles of three oceans) என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். நெடியோனுக்கு நெடுங் காலத்துக்கு முன்பே, சற்றேறப்ப தலைக்கழகத் தொடக்க காலமாகிய தி. மு. 12,000 ஆண்டளவில் கட்டுமரங்களில் அல்லது மரக்கலத்தில் குமரிநாட்டு மேலைக்கடற் கரையிலிருந்து தென்னுப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையைத் தமிழர் கண்டிருத்தல் வேண்டும். குமரி நாட்டுத் தமிழர் கடலுக்கப்பால் கண்ட முதல் நாடு தென்னுப்பிரிக்காவாதலின் மலைநாட்டு முருக வழிபாடு ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடை அங்குக் குடியேறிய தமிழர்களால் விரைந்து பரவியிருத்தல் வேண்டும். ஆப்பிரிக்க மொழிகளில் அளவிறந்த தமிழ்ச் சொற்கள் காணப்படுவதும் இக்கருத்தை நிலைநாட்ட வல்லதாகும். ஆப்பிரிக்காவில் அழிந்து போன நகர நாகரிகங்களைப் புதை பொருளாய்வாளர் கண்டெடுத்துள்ளனர் அந்நாகரிகத்துக்குரியவர் யார் என்று எவராலும் கண்டறியக்கூடவில்லை. ஆப்பிரிக்கப் பழங்குடிகள் அந்நாகரிக நகரங்களுக்குரியவராயின் அந்நாகரிகச் செம்மைப்பாடிழந்து அவர்கள் விலங்காண்டிகளாயிரார்.. எனவே, குமரி நாட்டிலிருந்த தமிழரே தி. மு. 10,000 ஆண்டளவில் முதன் முதல் மேலைக் கடல் கடந்து ஆப்பிரிக்க நாட்டைக் கண்டவரெனவும் ஆங்கு நாகரிக நகரங்கள் நிறுவிக் கால வெள்ளத்தில் மறையுண்டனர் அல்லது எகுபது நோக்கி நகர்ந்தனர் என்றும் உய்த்துணரலாம்.

இனி நெடியோன் கடல் கடந்து கண்ட நாடு ஆத்திரேலியா வாகவ்வ இருத்தல் வேண்டும். அக்காலம் தி. மு. 8000 முதல் தி. மு. 6500-க்கு உட்பட்டதாகலாம். கிழக்குக் கடலை எவரும் கடக்கத் துணியாத நிலையில் தானே முன்னின்று கலஞ்செலுத்தி செயற்கரிய செய்த பெரு மன்னனாக நெடியோன் அக்காலத்துத் திகழ்ந்தான்

ஞாலப் பனியூழிக் காலமாகிய தி. மு. 12,000 ஆண்டளவில் குமரிநாடு 49 நாடுகளைக் கொண்ட நாகரிக நாடாக உருப்பெற்றது. அதற்கு முன்னும், ஆத்திரேலியா மலேயாத் தீவுத் தொடர்ச்சி யினின்று பிரிந்த தி மு. 18,000 ஆண்டுகளுக்கு முன்னும் ஆத்தி ரேலியா வரை குமரிநாடு நிலத்தால் இணைக்கப்பட்டிருந்தது. ஆப் பிரிக்காவுக்கும் குமரிநாட்டுக்கும் இடையில் மட்டும் மேற்றிசையில் இருந்தது. அக்காலத் தமிழர் மேற்றிசையில் மட்டும் கடலைக் கண்டனர். கடல் தெய்வத்தை வருணன் என வணங்கி னர். அன்று முதல் வருணன் மேற்றிசைக் கடவுளானார். வாரணன்-வருணன். வார்தல்-நீளல். நீண்டு பரந்த கடல் வாரணம் எனப்பட்டது. மேலையாரிய மொழிகளிலும் இச்சொல்லே 'Marine' என்று திரிந்துள்ளது என்று மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்.

நியூகினியா, சாலமன் தீவுகளை முதலில் கண்டறிந்தவன் சேரரின் கிளைமரபினனான ஆதன :

கரும்பு உலகிலேயே முதன் முதல் தென் பசுபிக் கடலில் ஆத்தி ரேலியாவை யடுத்துள்ள நியூகினியா, சாலமன் தீவுகளில்தான் இயற்கையாகப் பயிராயிற்று என்று ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. இந்தியர் கி. மு 3000 முன்பிருந்தே கரும்பைப் பயிரிட்டு வந்தனர் என்றும் அதே நூல் கூறுகிறது. இந்தியாவுக்குக் கரும்பைக் கொணர்ந்தோர் யார் என்று பலரும் வினவுவதோடு அமைந்து விடுகின்றனர்.

> "அரும்பெறல் மரபின் கரும்பிவண் தந்தும்
> நீரக இருக்கை ஆழி சூட்டியநின்
> தொன்னிலை மரபின் முன்னோன்"

என்று ஔவையார் அதியமானைப் பாராட்டும் வரிகளில் அதியனின். முன்னோரான ஆதருள் ஒருவன் கீழைக் கடல் கடந்து சென்று சாலமன் தீவுகளை முதன் முதல் கண்டு அங்கிருந்து கரும்புப்பயிரைக் கொணர்ந்து தமிழகத்துக்கும் இந்தியாவுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான் என்று உறுதியாகக் கொள்வதில் எள்ளளவும் ஐயப்பாட டிற்கு இடமில்லை. கி. பி. 800 ஆண்டளவில்தான் கரும்பு அரேபியா, எகுபது, பிரான்சு, கிரேக்கம் ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப் பட்டு பயிரிடப்பட்டிருக்கிறது. கி. பி. 1493-ஆம் ஆண்டு கொலம்பசு கரும்புப் பயிரை அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றான்.

அமெரிக்காவுக்குக் கரும்புப் பயிரைக் கொண்டு சென்ற கொலம்பசை உலகம் அறிந்துள்ள அளவுக்கு கீழைத் தீவங்களிலிருந்து கரும்புப் பயிரையே முதன் முதல் கண்டுபிடித்துக் கொணர்ந்த சேரர்மரபின் செம்மலான ஆதனை உலகம் அறியாதது பெருவியப்பாகும். இவன் கரும்பு கொணர்ந்த காலம் முதற் கடல்கோளுக்கும் இரண்டாம் கடல்கோளுக்கும் இடைப்பட்ட தி மு 6050—தி. மு. 2350 கால எல்லையில், தி. மு 6000 முதல் 5000 வரையுள்ள காலமாகலாம்.

கரும்பு கொணர்ந்த ஆதன் தென் பசிபிக் கடலிலுள்ள சாலமன் தீவுக்கு ஏன் சென்ருன் என்னும் வினு நம் மனக் கண்முன் வந்து நிற்கின்றது. கடல் கடந்து புதிது காணும் ஆர்வம் வடிம்பலம்ப நின்ற நெடியோன் கால முதலே தமிழரின் உள்ளங்களில் பீறிட்டெழுந்ததே அதற்குத் தலையாய கரணியமாகும். பசிபிக் கடலில் வேறு எங்கெங்குத் தமிழர்களின் மரக்கலங்கள் சென்றன என்று ஆய்வது எளிதன்று. கரும்பு கொணர்ந்த நிகழ்ச்சி, தமிழர்கள், தலைமகன் (Captain) குக்கைப் போல் சுற்றுக் கடலோடிகளாக அக் காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஞால முழுதும் வளி செல்லும் திசையும் கலஞ்செலுத்தும் பருவமும் நன்கு தெளிந்திராவிடின் தென் பசிபிக்கில் உள்ள சாலமன் தீவிலிருந்து கரும்பு கொணர மட்டும் முதன் முதல ஒருவன் கடற்பயணம் மேற்கொண்டிருக்க முடியாது.

பழந்தமிழர்கள் சுற்றுக் கடலோடிகளாக விளங்கினர் :

பழந்தமிழர்கள் ஞாலத்தைக் கடல் வழி வலம் வந்த உலகமுதற் சுற்றுக் கடலோடிகளாக விளங்கினர் என்பதற்கு மற்ருெரு வலிய சான்றையும் காட்டலாம். ஆங்கில அகர முதலிகளில் 'Serendipity' என்ருெரு சொல் உள்ளது, இதற்கு, "எதிர்பாராமல் புதியனவற்றைக் கண்டுபிடித்தல்" என்று பொருள். இச்சொல் தோன்றிய வரலாறு பழந்தமிழர்களின் கடலோடும் திறமையை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

இலங்கைக்கு சேரன் தீவம் என்று ஒரு பெயரிருந்தது. கி. பி. 1754-இல் வால்போல் என்பவர் இச்சொல்லை சேரன் தீவம் என்னும் அடிப்படைச் சொல்லிலிருந்து புதிதாகப் படைத்து ஆங்கில மொழிக்கு வழங்கினுர். சேரன் தீவின் மூன்று இளவரசர்கள் ("The three princes of seran dip"—a fairy tale) என்னும் கதை நூலிலிருந்து இச்சொல்லை அவர் பெற்ருர். அக்கதையில் வரும் மூன்று இளவரசர்களும் கடல் வழி நெடுந்தொலைவு சென்று எதிர்பாராமல் பல புதுமைகளையும் அரிய கண்டுபிடிப்புகளையும் செய்தவராகக் கூறப்படுகின்றனர். இத்தொல் கதை பழந்தமிழ்க் கடலோடிகளைக் குறித்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. புதிது காணும் பொருட்டே கண்டுபிடிப்பு ஆர்வத்தில் கடலில் நெடுந்தொலைவு சென்று ஒன்றை எதிர்பார்த்துப் பிறிதொன்றைக் கண்டு பூரிப்

படைந்த தமிழர்களின் மிகப் பழங்கால கடல் வழிச் செலவுகள் அனைத்தும் இன்று கிடைத்தால் உலக வரலாற்றுசிரியர்க்கு பெரு வியப்பளிக்கும். ஞாலமுதல் கடலோடிகள் என்று மேலை நாட்டார் கூறும் பினீசியர்கள் கி. மு. 1100 அளவில் கடலில் கலஞ்செலுத்தி னர். வடிம்பலம்ப நின்ற நெடியோனுடனும் ஆப்பிரிக்கக் கிழக்குக் கரை யடைந்த தலைக்கழக காலத்து தமிழ்க் கடலோடிகளுடனும் ஏனை நாட்டுக் கடலோடிகள் எவரையும் ஒப்பிடுவது அறியாமை.

தமிழர் கடல் வழிச் சென்று யவன நாடு வென்றவர் :

சேரனின் முன்னோன் கடல் வழிச் சென்று, வன்சொல் யவனர் வள நாடாண்டவன் என்று கூறப்படுகிறான். கிரேக்க நாகரிகமும் திருந்திய ஆட்சியும் கி. மு. 300 முதல் மேலோங்கியிருந்தது. எனவே கிரேக்க நாட்டின் ஒரு பகுதியான அயோனிய நாட்டையோ அதன் ஆளுகைக்குட்பட்ட ஒரு பகுதியையோ சேரன் கி. மு. 500 ஆண்டுக்கு முன்பு வென்று ஆண்டிருத்தல் கூடும். அதனுற்றன் நண்ணிலக் கடற் பகுதியில் கிரீத்தாத் தீவிலும் பிற இடங்களிலும் 'திரிம்லி' என்று பிறரால் கட்டப்பட்ட தமிழர்களின் குடியேற் றங்கள் பெருகியிருந்தன. சேரன் யவன நாடுகளை வென்று ஆண்ட கி. மு. 1000 கி. மு. 500 கால எல்லையில் தமிழர்கள் அங்குக் குடி யேறியிருத்தல் வேண்டும். இஃதுணராத வரலாற்றுசிரியர் பலரும். நண்ணிலக் கடல் பகுதியில் 'திரிம்லி' (தமிழ்) இனத்தார் வாழ்ந்த தால் நண்ணிலக் கடற் பகுதியிலிருந்தே தமிழர் தென்னிந்தியா வுக்கு வந்தனர் என்று தலைகீழாக மாற்றி மயங்கி உரைப்பா ராயினர். தமிழினத்தின் தொன்மையும் வன்மையும் முன்மையும் அறியாத—அவரை நோக்கி அவர்களின் அறியாமைக்காக இரங்குவதல்லது வேறொன்றும் கூறுதற்கறியோம்.

சேரரின் கடலோடும் திறமைக்கு விளக்கமாக,

'சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலஞ் செல்லாது' (புறம்-126)

என்னும் மாறோக்கத்து நப்பசலையாரின் பாடல் அமைந்துள்ளது.

எகுபது சதுரக்கூம்பு (பிரமிடு) உலகில் கி. மு. 3000 ஆண்டைய தொன்மையது என்பர். அதற்கும் முந்திய தொன்மை யான கருங்கற் கோயில் நண்ணிலக் கடலில் மால்தா தீவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தி. மு. 4000 அல்லது தி. மு. 5000 ஆண்டள வில் அச்சிறு தீவில் அத்துணைச் சிறப்பு வாய்ந்த கருங்கற்கோயிலைக் கட்டியவர் யார்? சிறு தீவில் வாழும் பழங்குடிகள் அத்துணை ஆற்றல் வாய்ந்தவர் அல்லர். தமிழ்நாட்டுக் கடலோடிகளான தமிழ் வணிகரே அக்கோயிலைக் கட்டியிருத்தல் கூடும். சூயசு கால்வாய்

தி. மு. **1800** ஆண்டளவிலேயே வெட்டப்பட்டிருந்தது என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

அரேபிய நாடு வரை வணிகம் செய்து வந்த தமிழ்க் கடல் வாணிகரின் முயற்சியால் நண்ணிலக் கடலைக் கடல் வழி இணைக்கும் பணி செயல் வடிவு பெற்றிருத்தல் வேண்டும்.

பழந்தமிழர் நில வழியாகவும் கடல் வழியாகவும் வென்ற நாடுகளை அரசாளும் பொருட்டு அரசாளும் பயிற்சி தரப்பட்டவர்களை **'ஒளியர்'** என்றழைத்தனர். ஒளியராவர் வென்ற மண்டலங்களில் அரசராதற்குரிய வேளாளர் என்று கூறப்படுகிறது. உலக முழுதும் குமரிநாட்டுக் காலத்திலும் தென்னக மூவேந்தர் காலத்திலும் கடல் வழிச் சென்று வென்ற நாடுகளில் தமிழ் வேந்தர் அமைத்த ஆட்சிகளைப் பற்றியும் தமிழ்க் குடியேற்றங்களைப் பற்றியும் அறிய விரிவான ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், வடிம்பலம்ப நின்ற நெடியோன் காலத்துக்கு முன்பிருந்தே கடலோடும் கலையிலும் நிலக் கண்டுபிடிப்புக் கலையும் பழந்தமிழர் ஞால முதல் வாகை சூடிய விறன் மறவராய் இருந்தனர் என அறியலாம்.

வெளிவந்து விட்டது! விற்பனைக்குக் கிடைக்கிறது!

பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

அரிய பாடற்களஞ்சியம்

தொடக்கக் காலத்திலிருந்து **1978**-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ **1800** வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு! *செந்தமிழ்த் தேனூறு!*

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய இலக்கியப் பாச்சுரங்கம்!

முதல் தொகுதி	**உரு.**	**15—00**
2-ஆம் தொகுதி	,,	**11—00**
3 ,, தொகுதி	,,	**17—00**

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில் விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு

தென்மொழி, சென்னை-5.

புதுச்சேரி அரசுக்குத் தனித்தமிழ்க் கழகத்தின் வேண்டுகோள்

கும்பம்; உஎ-ஆம் பக்கல் (10-3-80) புதுச்சேரி முதலமைச்சர் திரு. **தெ. இராமச்சந்திரன்** அவர்களை புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகத் தலைவர் திரு. **தமிழநேயன**, செயலர் திரு. **க. தமிழ மல்லன்**, செயற்குழு உறுப்பினர் திரு. **ம. அரங்கசாமி** ஆகியோர் நேரில் செவ்வி கண்டனர். அப்பொழுது அச்சிட்ட 14 வேண்டுகோள்கள் அடங்கிய கீழ்க்காணும் அறிக்கையை அவரிடம் அளித்து அவற்றை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டனர். அவற்றைக் கவனிப்பதாக முதல்வர் கூறியுள்ளார். அவ்வறிக்கை கீழ்வருமாறு :

1. தமிழ்நாட்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் 'தமிழ் வளர்ச்சித்துறை' என்று ஒரு துறையைப் பல்லாண்டுகளாகத் தொடங்கித் தமிழ்நாடு அரசே நடத்தி வருகிறது. அதுபோலத் **'தமிழ் வளர்ச்சித்துறை'** ஒன்றைப் **புதுச்சேரி அரசு தக்காரைக் கொண்டு அமைத்து** அது தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுமாறு செய்ய வேண்டும்.

2. சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த புதுச்சேரி அரசு, தமிழ் வளர்க்கும் செயற்பாட்டின் ஒரு பகுதியென முதற்கட்டமாக "23 துறைகளில் சுற்றறிக்கை முதலியன தமிழிலேயே வருதல் வேண்டும்" எனக் கட்டளை பிறப்பித்திருந்தது. அதை மீண்டும் உயிர்ப்பிக்குமாறும், **எல்லாத் துறைகளிலும் சுற்றறிக்கை, கட்டளைகள் (Orders)** முதலியவற்றைத் **தமிழிலேயே வெளியிடுமாறும் செய்ய** வேண்டும்.

3. புதுவை—காரைக்கால் பகுதிகளில் உள்ள **மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தமிழைப் பயிற்று மொழியாக்குதல்** வேண்டும்.

4. உயர்நிலைப் பள்ளிகளில் நடைபெறும் **இந்தி வகுப்புகளை நிறுத்துதல்** வேண்டும்.

5. புதுச்சேரி அரசு அலுவலர்கள் அனைவரும் **தமிழிலேயே கையொப்பமிடுமாறு கட்டளை** பிறப்பிக்க வேண்டும்.

6. அரசு 1977-இல் பெயர்ப்பலகைகளைத் தமிழில் எழுதி வைக்குமாறு வணிக நிறுவனங்களுக்குக் கட்டளை வெளியிட்டிருந்தது. அரசின் கட்டளையை நிறைவேற்றத் தனித்தமிழ்க் கழகம் புதுவைநகரம், அரியநகர், முதலியார்பேட்டை போன்ற பகுதிகளில்

உதவியது. எனினும் பலர் தமிழில் பெயர்ப்பலகை எழுதி வைக்காமல் உள்ளனர்! அரசின் கட்டளையைச் செயற்படுத்தாதார் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்ததுபோலப் புதுச்சேரி அரசும் புதுவைப் பகுதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. நகராமன்றமும் ஊராட்சிகளும் கொம்யூன் (பஞ்சாயத்து) வழங்கும் **பிறப்பு இறப்புச் சான்றுகள்** முதலியவற்றைப் பழையபடி தமிழில் வழங்குமாறு செய்யவேண்டும்.

8. புதுச்சேரி, பாவேந்தர் பாரதிதாசனரால் பெருமை பெற்றதாகும். அவரது விழாவை அரசு தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடும் வகையில பாவேந்தர் குடும்பத்தார், மூத்த தமிழ்ப்பற்றுள்ள தமிழ்ப்புலவர்கள், அரசின் முதல்வர்கள், இலக்கிய அமைப்பினர் ஆகியோரைக் கொண்ட நிலையான '**பாவேந்தர் விழாக் குழு**' ஒன்றைப் புதுச்சேரி அரசு அமைக்க வேண்டும்.

9. இவ்வாண்டு **பாவேந்தர்க்கு** அஞ்சல்தலை வெளியிடுமாறு நடுவணரசைப் புதுவை அரசு, சட்டமன்றத் தீர்மானம் மூலம் வற்புறுத்த வேண்டும்.

10. பொது நூலகத்தில் 'அரவிந்தர் நூல்கள்' 'காந்தி நூல்கள்' ஆகியவை மேற்கோள் நூல்களாக (**Refference Books**) வைக்கப்பட்டிருப்பதுபோல், பாவேந்தர் பாரதிதாசனரின் நூல்களும் தொகுத்து வைக்கப்பட வேண்டும்.

11. அண்ணா சிலைக்கருகில் மறைமலையடிகள் சாலையில் அமைந்துவரும பாலத்திற்குப் '**பெரியார் பாலம்**' என்று பெயர் சூட்ட வேண்டும்.

12. அரியநகரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குத் "தந்தை பெரியார் உயர்நிலைப்பள்ளி" எனப் பெயரிட வேண்டும்.

13. அலுவலர்க்கு வழங்கப்பட்டுள்ள இந்தி வருகைப் பதிவேட்டை நீக்கித் தமிழில் அவற்றை வழங்கவேண்டும்.

14. **நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு** அவர்களின் நூற்றாண்டான இவ்வாண்டில் சிலை அமைத்து விழாக் கொண்டாட வேண்டும்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	30 உருபா	30 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	15 ,,	15 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனூர்

விரைவு ஒளிநீர் விழ்கை :

ஒருவன் ஒரு பெண்ணைப் புணரும் பொழுது, தன் ஒளிநீரை வெளியிடுவதில் தன் விருப்பம் போல் அடக்கி ஆள இயலாமைக்கு விரைவு ஒளிநீர் விழ்கை எனப் பெயர். இவ்வியலாமை உள்ளவர்களின் ஆண்குறி, பெண்குறியை நெருங்கும் போதேயோ அல்லது பெண்குறியின் உள் சென்ற சிறிது நேரத்திலேயோ ஒளிநீர் வெளியாகிறது. விரைவு ஒளிநீர் வீழ்கை உள்ளவர்களிடம் மன அலித்தன்மை தோன்றும் என்பதை முன்பே பார்த்தோம். விரைவு ஒளிநீர் வீழ்கை உடையோரில் பெரும்பாலோர் நரம்புத் தொடர்பு உடைய கோளாறுகள் உடையவர்கள். நரம்புத் தொடர்பு உடைய கோளாறுகள் அல்லாத கோளாறுகளாலும் விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்படலாம். பலமுனைகளில் நின்று ஆராயின் விரைவு ஒளிநீர் வீழ்கை அழிவு தரக்கூடிய ஒரு குறைபாடேயாகும். அதுவே அழிவைத் தரத்தக்கது என்பதால் அன்று. அக்குறையால் ஏற்படும் பிற்பயன்கள் கேடு விளைவிப்பன. நுணுகி ஆராயின் விரைவு ஒளிநீர் வீழ்கையால் ஏற்படும் இயலாமைக்குப் பெயர் அலித்தன்மை எனக் கூறல் பொருந்தாது. ஏன் எனில், இங்கு ஆண்குறியின் எழுச்சி இருக்கின்றது; பெண்ணை அணுக முடிகிறது; ஒளிநீர் வெளியேறுகிறது; இன்பம் உண்டாகிறது; ஆண்குறியின் எழுச்சி மறைகிறது; அதாவது முழுப் புணர்ச்சியில் மாந்தனுடைய பக்கம் நடக்க வேண்டிய அவ்வளவு செய்கைகளும் குறைவின்றி நடைபெறுகின்றன. உண்மையான ஒளிநீர் வீழ்கைக்கும், குறைந்த 'தங்கும் ஆற்ற'லுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு அறிதல் இன்றியமை

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைகளும் பகிர்ந்து கொள்வது உங்களது ஒன்றுத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட செல்வர்களே நினைத்துப் பாருங்கள்! இந்த உலகம் பொதுவுடைமை ஆகத்தான் போகிறது. அப்படி ஒரு நாள் வரத்தான் போகிறது! எனப் பாவலர் செல்வர்களுக்கு அறைகூவல் விடுகிறார். அவர் கூறும் ஒரு நாள் எந்நாளோ? அந்நாளை வருக வருக என்று வரவேற்போம்!

'எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்' என்னும் பாவேந்

தர் வரிக்கு ஓவியம் கிடைக்கிறது.

o

யாதது. குறைந்த 'தங்கும் ஆற்றல்' உள்ள மாந்தன், புணர்ச்சி முற்றுப்பெற இரண்டு அல்லது மூன்று நிமையங்களே எடுத்துக் கொள்கின்றான். இது குறைந்த நேரம்தான். இருப்பினும் இது விரைவு ஒளிநீர் வீழ்கை ஆகாது. விரைவு ஒளிநீர் வீழ்கையில், ஒளிநீர் பெண்குறியின் நுழைவு வாயிலிலேயோ அல்லது ஆண்குறி, பெண்குறியின் உள் முழுவதும் உட்செல்வதற்கு முன்பேயோ வெளியேறுகிறது.

விரைவு ஒளிநீர் வீழ்கை மனத்திற்கும், கலவி உறுப்புகளுக்கும் உள்ள தொடர்பில் உண்டாகும் கேடுகளால் ஏற்படுகிறது. இக்கேடுகளே விரைவு ஒளிநீர் வீழ்கைக்கு பெரும்பான்மையான காரணங்களாம். விரைவு ஒளிநீர் வீழ்கை உடையவர் புணர்ச்சியில் மிக மிகக் குறைந்த இன்பமே பெறுகின்றார். புணர்ச்சியில் பெண் உடலின் நெருக்கத்தால் உண்டாகும் தனி இன்பததை இழக்கின்றார். இந்நிலையே நீடிக்குமாயின், அவர் மனதில் வெட்கமும் அச்சமும் தோன்றி, அவரை மன அலித்தன்மை உடையவராக ஆக்கலாம். ஆண்குறியின் எழுச்சி மறைகிறது. புணர வேண்டும் என்ற விருப்பம் கூட மறைகிறது. நாள் ஆக ஆக இக்குணங்கள் வளர்ச்சி யடைகின்றன. ஆனால் மனையாளின் கலவி உணர்ச்சியோ, கிளர்ந்து எழுகின்றது. கிளர்ந்து எழுந்த கலவி உணர்ச்சி தணிக்கப்படுவதே இல்லை. அதனால் மனைவிக்கு நரம்பு பற்றிய கோளாறுகள் உண்டாகின்றன. கணவனும் மனைவியும், பெற்றோர் ஆகக்கூடிய தன்மையே அற்றுப் போகலாம். அதனால் அவர்களின் மணவாழ்க்கை கசந்து, எப்பொழுதும் முணு முணுப்பும், சண்டை சச்சரவும் ஏற்பட்டு, இருவரும் பிரியக்கூடிய நிலை ஏற்படலாம். ஆகவே விரைவு ஒளிநீர் வீழ்கை அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிடக்கூடிய ஒரு குறையன்று. நூற்றுக்கு ஐம்பது பேர் இக்குறையால் துன்புறுகின்றனர் எனக் கணக்கிட்டுள்ளனர்.

சில வேளைகளில் யாருக்கும் இவ்வகை நிலை ஏற்படலாம். மிகுந்த நாள் மனைவியை விட்டுப் பிரிந்து இருந்தாலும், புணர்ச்சிக்கு முன் மிகுந்த அளவிலும், மிகுந்த நேரமாகக் கிளர்ச்சியோடு இருந்தாலும், புணர்ச்சியில் மிக விரைவில் உச்சநிலையை அடைதல் இயற்கையே. புணர்ச்சியில், எல்லா முயற்சிகளிலும், எல்லா நேரங்களிலும், அடுத்து அடுத்துத் தோல்வியே கண்டால், அதை நரம்புத் தொடர்புடைய கோளாறு என்கிறோம். மன அலித்தன்மைக்கும் இதற்கும் ஒரே அடிப்படைதான். இது மனத்தை அடிப்படையாகக் கொண்டது. அச்சம், தொல்லை, குற்ற மன நினைப்பு, விரைவில் செயலாற்ற வேண்டிய சூழ்நிலை, போன்றவை இரண்டு தன்மைகளுக்கும் பொதுவானவை.

விரைவு ஒளிநீர் வீழ்கைக்குக் காரணம். அதன் தன்மை, ஆகியவற்றைப் பற்றி மருத்துவர்கள் கூட மிகச் சிறிய அளவி

லேயே அறிவர். விரைவு ஒளிநீர் வீழ்கை கலவி உறுப்புகளின் வன்மை இன்மையால் உண்டாகலாம். மிகுந்த அளவில் தாக்கப் பட்ட நரம்புத் தளர்ச்சியின் அறிகுறியே விரைவு ஒளிநீர் வீழ்கை யாக இருக்கலாம். மிகு புணர்ச்சியாலோ, அல்லது கை இன்பத் தாலோ இஃது உண்டாகலாம் என்றுதான் மருத்துவர்களால் நினைக்க முடிகிறதே தவிர, இதனுல்தான் உண்டாகிறது என அறுதி யிட்டுக் கூற முடியவில்லை.

விரைவு ஒளிநீர் வீழ்கை உடையவர், புணர்ச்சியின் முழு இன் பத்தையும் புணர்ச்சி துவக்கப்படுவதற்கு முன்பேயே தன் கற்பனை யில் பெற்று மகிழ்கிருர். அதனுல் பெண்ணுடன் இன்பம் திளைக்க சில விநாடிகளே வேண்டியிருக்கின்றன என மன நூலின் தந்தை யான **பிராயிடு** நினைக்கின்ருர். மிகுந்த உணர்ச்சி உடைய சிறுநீர்ப்புற வழியைச் சிறிய அளவு ஒளிநீர் தொட்ட உடனேயே சிறுநீர்ப்புற வழி மிக விரைவாகச் சுருங்கி ஒளிநீரை வெளியேற்று கின்றது என **ஆப்ரகாம்** என்ற அறிஞர் கருதுகின்ருர். சிலர் இது சரியான பழக்கமின்மையால் உண்டாகிறது என எண்ணுகின்றனர். சிறு அகவையில் எப்படி, மலம், சிறுநீர் கழிப்பதை அடக்கப் பழகு கிருேமோ அவ்வாறே மாந்தனும் ஒளிநீரை அடக்கப் பழக வேண்டும். சிலர் நினைப்பது போன்று ஒளிநீரை அடக்கல் பிறவி யிலேயே ஏற்பட்ட மேம்பாடு அன்று. ஒளிநீரை அடக்கப் பழக்க மில்லையானுல் விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்படுகிறது. இது வெறும் நடைமுறைக் கோளாறேயன்றி மற்றன்று என்பர் **கிர்ச்சு** என்ற அறிஞர். புணர்ச்சி இரண்டு வகை ஆற்றல்களால் இயக்கப்படு கின்றது. விருப்பங்களும், கிளர்ச்சிகளும் மாந்தனைப் புணரத் தூண்டுகின்றன. இஃது ஒருவகை ஆற்றல். மற்ருெரு வகை ஆற்றல் அம்மாந்தனின் புணர்ச்சி நினைப்பதற்குத் தடை விதித்து, அவனை அதிலிருந்து, வேறு பக்கம் இழுக்கின்றது. ஆக அவைகளை வேண்டும் ஆற்றல் வேண்டாம் ஆற்றல் எனப் பெயரிடலாம். வேண்டும் ஆற்றல் வன்மையற்று இருந்தால் வேண்டாம் ஆற்றலின் கை ஓங்கி, தன் பக்கம் ஈர்த்து விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்படச் செய்கிறது. புணர்ச்சியால் தொற்று நோய் உண்டாகலாம் என்ற அச்சம் கள்ளப் புணர்ச்சியால் உண்மை வெளிப்படலாம் என்ற அச்சம், புணர்ச்சி கரிசான செயல் என்ற நினைப்பு, ஆகியவற்ருல் வேண்டாம் ஆற்றல் மிக மிக வன்மை அடைந்து, பொது விருப்பம் கூட மறையலாம். மாந்தன் கெட்ட வழியில் செல்லும் பொழுது, அஃதாவது தன் மனைவியைத் தவிர பிற பெண்ணைப் புணர நினைக் கும் பொழுது, அச்சத்தாலோ, அல்லது கரிசான செயல் என்ற நினைப்பாலோ விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்படுகிறது. இந்த விரைவு ஒளிநீர் வீழ்கை அம்மாந்தனின் கெட்ட வழியைக் குத்திக் காட்டுவதாக **இசுடீகெல்** என்ற அறிஞர் கருதுகின்ருர்.

மேலே கூறிய அறிஞர்களின் விளக்கப்படி நோக்கின் விரைவு ஒளிநீர் வீழ்கையை இருவகையாகப் பிரிக்கலாம். தள்ளு நரம்பு மண்டலத்திலிருந்து அல்லது நடுவத்திலிருந்து வரக்கூடிய மிகுந்த உணர்ச்சித் தன்மை ஒருவகை. இது ஒளிநீர் வெளியேறுவதை அடக்க இயலாமையே தவிர வேறன்று. புணர்ச்சியை அடக்கி ஆளும் இரண்டு வகை. நேர் எதிரிடையாக வேலை செய்யும் நரம்பு ஆற்றல்களில் ஏற்படும் மாற்றங்களால் விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்படுகிறது. இஃது இரண்டாவது வகை. நுணுகி ஆராயின் விரைவு ஒளிநீர் வீழ்கையால் துன்புறும் மாந்தனிடம் இவ்விரண்டு வகைகளுமே காணப்படலாம்.

விரைவு ஒளிநீர் வீழ்கைக்கு மருத்துவம் செய்வது பற்றி, மருத்துவர்களுக்குள்ளேயே மாறுபட்ட நோக்கங்கள் உள்ளன. பழமையைத் தழுவும் மருத்துவர்கள், இக்கோளாறு ஆண்குறியின் நுனியில் அல்லது பூவைச்சுற்றி உள்ள தோலில் ஏற்படும் மிகுந்த உணர்ச்சியால் உண்டாகிறது என நினைந்து, புணருவதற்கு முன், ஆண்குறியின் பூவின் மேல் 'கொக்கைன்' களிம்பு போன்ற மரத்துப் போகச் செய்யும் மருந்தைப் பூசி, அதனால் பூவின் நரம்பு நுனிகளை மரத்துப் போகச் செய்து ஒளிநீர் வெளியாவதைக் காலம் தாழ்த்தச் செய்யலாம் என நம்புகின்றனர். ஆனால் இம்முறையைப் பிற மருத்துவர்கள் ஒத்துக்கொள்வதில்லை.

இக்கோளாறு உடையவர்களில் சிலர் இது பால் உணர்ச்சியின் அளவு கடந்த அழுத்தத்தால் ஏற்படுகிறது; ஒரு முறை விரைவாகப் புணர்ந்த உடன், அஃதாவது விரைவு ஒளிநீர் வீழ்கை ஏற்பட்ட உடன், அந்த அழுத்தம் நீங்கி விடுகிறது; அதற்குச் சிறிது நேரத் திற்குப்பின் புணர்ந்தால் மிகுந்த நேரம் புணர முடியும் என, நினைக் கின்றனர். இது சிலரைப் பொறுத்த மட்டிலுமே உண்மையாகுமே தவிர, எல்லாரைப் பொருத்த மட்டிலும் உண்மை ஆகாது. விரைவு ஒளிநீர் வீழ்கை மனத்தை அடிப்படையாகக் கொண்டதினால், மன அலித்தன்மைக்குச் செய்யும் மருத்துவமே இதற்கும் பொருந்தும். உள் மனத்தில் ஏற்படக்கூடிய தடைகளை நீக்க வேண்டும். சரியான விருப்பம் ஏற்பட உண்மை அன்பு உண்டாக வேண்டும். முயற்சி யின் மூலமாகவும் பயிற்சியின் மூலமாகவும் ஒளிநீர் விரைவில் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த வேண்டும். இவ்வழிகளின்படியே முயன்றால் உறுதியாக இக்கோளாறு நீங்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க.

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக்கொண்டு வர வேண்டுகிறோம்.

—**அமைச்சர்**.

செய்திகள்

1. முத்தமிழ் விழா — தியாகராசர் பொறியியற் கல்லூரி — மதுரை :

கடந்த மார்ச்சு **4, 5, 6**-ஆம் பக்கல்களில் மதுரை, தியாகராசர் பொறியியற் கல்லூரித் தமிழ் மன்றம், முத்தமிழ் விழாவைச்சிறப்புற நடத்தியது. 4-ஆம் பக்கல் காலை நடந்த இயல் அரங்கில், திருவாளர்கள் கி. **வீரமணி** (விடுதலை ஆசிரியர்), பாவலர் **குடியரசு** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். அன்று மாலை யாதவர் கல்லூரி முதல்வர் பேரா. **தமிழ்க்குடிமகன்** க. மு. தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. 5-ஆம் பக்கல் காலை நடந்த இசை விழாவில் திரு. **கி. ஆ. பெ. விசுவநாதம்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். பின் பேரா. **சோ. சோமீ. சுந்தரம்** தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. **6**-ஆம் பக்கல் மாலை **6** மணியளவில் நடந்த நாடக விழா கல்லூரி முதல்வர் தலைமையில் நடந்தது. தென்மொழிஆசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்கள் 'நாடகத் தமிழ்' என்பது பற்றிச் சிறப்புரையாற்றினர். அதன் பின்னர் கல்லூரி மாணவர்கள் நடித்த நாடகங்கள் நடைபெற்றன. தமிழ் மன்றத் தலைவர் திரு. **வா. பால சுப்பிரமணி** நன்றியுடன் மூன்று நாள் விழாவும் இனிதே நிறைவுற்றது.

2. தமிழ் இலக்கியப் பேரவை—தொடக்க விழா, பெருந்தோட்டம் : சீர்காழி

கடந்த கும்பம் **25 (8-3-80)** காரி மாலை **5-30** மணியளவில், பெருந்தோட்டம் தமிழ் இலக்கியப் பேரவை தொடக்க விழா, அவ்வூர் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. விழாவிற்கு திரு. **பெ. கு. அருணாசலம்** தலைமை தாங்கினர். மொழி வாழ்த்தைத் தொடர்ந்து, பொதுச் செயலர் திரு. **வை. அறிவுத்தொகையன்** (ஞான சேகரன்) க. மு. எழுச்சி மிக்க வரவேற்புரையாற்றினர். இணைச் செயலர் திரு. **அ. இராசாராமன்** அறிக்கை படித்தார். தலைவரின் அரிய தலைமையுரைக்குப் பின் திருவாளர்கள், க. நாகராசன், பொன் சம்பந்தம், சா. கைலாசம், வ. பாசுகரன், திரு. **அரசேந்திரன்** க. மு. (அ. ப. க. ஆராய்ச்சி மாணவர்) ஆகியோர் விளக்கவுரை யாற்றிய பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்கள் அரிய நீண்ட சிறப்புரை ஆற்றினர். திரு. **இராமமூர்த்தி**யின் நன்றியுரைக்குப் பின் இலக்கியப் பேரவை தொடக்க விழா இனிது முடிவுற்றது.

3. நற்றமிழ்ப் பேரவை—திருவெறும்பூர்—திருச்சி-14 :

சென்ற கும்பம் 26 (9-3-80) மாலை 7 மணியளவில் திருச்சி, திருவெறும்பூர், ஊரகத்தில் ஊரக மன்றத்தில் நற்றமிழ்ப் பேரவையின் இரண்டாவது சிறப்பு நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடக்கத்தில் திரு. **குழந்தை ஈகவரசன்** தென்மொழிப் பாடல்களை பாடினர். திரு. **நாரா. மகிழ்நன்** வரவேற்புரையாற்றி அறிக்கை படித்தார். அதன் பின் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்ற வரைபட மேலாளர் திரு. **இரா. மோகன் போசு** (இள நிலைப் பொறியாளர்), தலைமையுரையாற்றினர். பின்னர் திருவாளர்கள் **கல். மணி. திருவேங்கடம்** (ஆராய்ச்சி மாணவர், காரைக்குடி, அ. க.), **சி. அரசிறைவன்** அறி. இ. ஆகியோர் நல்லுரையாற்றினர். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்கள், **'தமிழியல் வாழ்க்கை'** என்னும் தலைப்பில் அரியதொரு சிறப்புரையாற்றினர். இரவு **10-30** மணியளவில் விழா இனிது நிறைவுற்றது. விழாவில் தலைவர் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென ஆசிரியரிடம் உரு. 10 நன்கொடையளித்தார்.

4. புதுச்சேரி தனித்தமிழ்க் கழகம் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா :

கழிந்த மீனம் 9 (22-3-80) காரி மாலை **6-30** மணியளவில், புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகம், தன் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவை, புதுச்சேரி, கதிர்காமம் பள்ளித் திடலில் கொண்டாடியது. விழாவிற்குக் கழகத் தலைவர் திரு. **தமிழநேயன்** அவர்கள் தலைமையேற்ருர். திரு. **சி. தமிழ்மாறன்** க. இ. (கல். இ) வரவேற்புரையாற்றினர். தொடக்கத்தில் திரு. **சிவசண்முகன்** தமிழிசைப் பாடல்களையும், **தென்மொழி நா. இளமாறன்** தென்மொழிப் பாடல்களையும் பாடினர். அதனையடுத்து திரு. **செ. பன்னீர்ச்செல்வம் (தமிழம்** ஆசிரியர்) புலவர் திரு. **அரிமதி தென்னகன்,** பேரா. **அ. பசுபதி** க. மு. ஆகியோர் எழுச்சியுரையாற்றினர். பின்னர் கழகச் செயலர் திரு. **க. தமிழமல்லன்** ஆண்டறிக்கையையும், புதுச்சேரி அரசுக்குத் தனித்தமிழ்க் கழகம் கொடுத்த வேண்டுகோள்களையும் படித்து விளக்கினர் அதன் பின் பாவலர் திரு. **குமர. நடவரச ஈவப்பனர்** ஆண்டு மலரை வெளியிட்டு உரை நிகழ்த்தினர். அவரைத் தொடர்ந்து மயிலம் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. **வே. சிவசுப்பிரமணியன்,** க.மு. விரிவுரையாற்றிப் பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்தார். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அரியதோர் எழுச்சியுரையாற்றினர். திரு. **கதிர்ச்சிவனின்** நன்றியுரைக்குப் பின் விழா இனிது நிறைவுற்றது. இந்நிகழ்ச்சிக்கு நெய்வேலியினின்று உ. த.க. அன்பர்கள் திருவாளர்கள் திருமாறன், அறவாழி, கு. ஏழுமலை ஆகியோர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பிற செய்திகள்

1. கடந்த 10-2-80-இல் திருச்சி திருக்குறள் பேரவையின் மூன்றுவதாண்டு திருவள்ளுவர் திருநாள் விழா அருள்மிகு சிவசுப்பிரமணியர் திருக்கோயிலில் திரு. பி. சின்னையன் தலைமையில் நடைபெற்றது. திரு. தி. சா. நாகவரசன் வரவேற்புரையாற்றிடத் திருவாளர்கள் புலவர் மு. பாலசுந்தரம், புலவர் க. கோபண்ணன், கு. திருமாறன், க. மு., நா. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் தென்மொழி நன்கொடையாக விடுத்த உரு. 10 நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

2. கடந்த 16-3-80 ஞாயிறு, திருக்கழுக்குன்றம், தமிழ்க் கழகத்தின் முதலாண்டு நிறைவு விழா மலையடிவார மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. விழாவில் சிறுகதையரங்கம், வழக்காடு மன்றம், கருத்தரங்கம், பாராட்டரங்கம் முதலியன நடைபெற்றன. விழாவில் புலவர் தி. நா. அறிவொளி க. மு, அரிமதி தென்னகன், தாமரைக் கண்ணன், சிலம்பொலி சு. செல்லப்பனுர் முதலிய அறிஞர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

3. சென்ற 9-3-80 ஞாயிறு திருச்சி, தென்மொழியன்பர் திரு. ப. சாகுல் அமீதுக்கும், நசீருன்னிசா பேகத்திற்கும் தில்லைநகர் மக்கள் மன்றத்தில் நிக்கா என்னும் திருமணம் சிறப்புற நடந்தேறியது. திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 15 அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. மணமக்கள் நீடூழி வாழ நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

4. புதுச்சேரி, செந்தமிழர் இயக்கச் சார்பாக, உலக உழைக்கும் மகளிர் நாள்—மார்ச்சு 8, ஒரு கருத்தரங்கு, நடைபெற்றது. திருவாட்டிகள் அ. சலேத்மரி, இரேணுகா அப்பாத்துரை, சரசுவதி சுப்பையா, சுசாதா சேசாத்திரி முதலியோர் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

5. கடந்த கும்பம் 5 (17-2-80) அன்று திருப்பூரில், இலக்கிய ஆர்வமும், தூய தமிழ்க் கொள்கையும் கொண்ட அன்பர் பலர் ஒன்று சேர்ந்து, திரு. கு. ந. கருப்புச்சாமி அவர்கள் தலைமையில் 'தமிழ் இலக்கிய மன்றம்' ஒன்று தொடங்கியுள்ளனர். **தென்மொழி க. தமிழப்பன்** செயலர். திருப்பூர் பகுதியில் தூய தமிழையும் இலக்கியத்தையும் வளர்க்க இம்மன்றம் பாடுபடும். மன்ற உறுப்பினர்கள் கடந்த 9-3-80-இல் ஒன்று கூடித் தொல்காப்பியம், வள்ளுவம், தனித்தமிழ் முதலிய பல்வேறு தலைப்புகளில் தங்கள் கருத்துரைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

6. மயிலாடுதுறை, தென்மொழி முகவர் தனசங்கு அவர்களின் மகள் சகுந்தலா என்கிற தாமரைச் செல்விக்கும், கோ.ராசேந்

திரன் க. இக்கும் கடந்த 23-3-80 குடந்தையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. மணமக்கள் நீடுழி வாழ வாழ்த்துகிறேம்.

நன்கொடைகள்

1. நெல்லை, மஞ்சள் நீர்க்காயல், முன்னுள் தென்மொழி அமைச்சர் திரு. த. அன்பழகன்—தாமரை அவர்களுக்கு 30-11-79 அன்று பிறந்த பெண் குழந்தை அருட்செல்வியின் நினைவாக உருபா 9 அன்பளிப்பாக வரப்பெற்றேம். குழந்தை அருட்செல்வி சீருஞ் சிறப்புடன் பல்லாண்டு இனிதே வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. புதுவை, சேலியமேடு 'பாவாணர் தமிழ் மன்றம்' தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 10, கடலூரில் 5-2-80 அன்று நடந்த ஆசிரியர் நிகழ்ச்சியில் கொடுத்ததை அன்புடனும் நன்றியுடனும் பெற்றுக் கொண்டோம்.

3. கோபிசெட்டிபாளையம், புலவர் திரு. பாரி மணியம் க. மு. தாம் தமிழாசிரியராகப் பதவி அமர்த்தப் பெற்ற நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 10 அன்புடன் விடுத்துள்ளார். அதனை நன்றியுடன் பெற்று, அவர் அத்தமிழ்த் தொண்டில் மேன்மேலும் சிறந்து விளங்க, தென்மொழி வாழ்த்துகிறது.

4. படைத்துறைத் தென்மொழியன்பர் திரு த. சின்னத்துரை (c/o. 56, A. P. O.) அவர்கள் வழி, படைத்துறையைச் சேர்ந்த தென்மொழியன்பர்கள் திருவாளர்கள் இல. கோவிந்தராசன், சு.மாரிமுத்து, தோ. மூக்கையா, சாண் தாவீது, த. பாண்டியன், க. சங்கர், சந்திரன், சு. மணி, க. காந்தி ஆகிய ஒன்பதின்மரும் தலைக்கு உருபா 4 மேனி உருபா 36-ஐத் தென்மொழி வளர்ச்சிக்கென விடுத்துள்ளனர். தூய தமிழ் மறவர்கள் தம் அருள் உள்ளத்தைத் தென்மொழி நன்றியுடன் பாராட்டுகிறது.

5. சென்ற மாதம் சாமளாபுரம், அருள்மிகு வாழைத் தோட்டத்து ஐயன் கோவில் உயர் பள்ளியில், கதிர் ஆலை உயர்பள்ளித் தலைமையாசிரியர், திரு. கே. ஏ. இராயப்பன் க. மு; கல்.மு. அவர்கள் தலைமையில் பல்லடம் திரு. **தென்மொழி முத்துக்குமரன்** அவர்கள் சிறப்புரையாற்றச் சென்ற பொழுது, தென்மொழி வளர்ச்சிக்கெனக் கொடுக்கப்பெற்ற அன்பளிப்பு உரு. 25 வரப்பெற்றேம். நன்கொடையாளர்க்கு நெஞ்சுவந்த நன்றி.

6. கடந்த திங்கள் அன்னூர், அரசு மேனிலைப் பள்ளியில், கால்நடை மருத்துவர் திரு. ப. சுப்பிரமணியம் கா. அறி. இ. அவர்கள் தலைமையில் 'இளைய தலைமுறை' என்னும் பொருளில் சிறப்புரையாற்றுதற்குப் பல்லடம் திரு. **தென்மொழி ந. முத்துக்குமரன்** சென்ற பொழுது, அளிக்கப்பெற்ற நன்கொடை உரு. 15 வரப் பெற்றேம். அன்பளிப்பாளர்களுக்குத் தென்மொழி நன்றி பகர்கிறது.

8. அச் செய்தித் தாளில் பொது மக்களுக்கான செய்திகளையே வெளியிடல். நமது தனித்தமிழ்க் கொள்கையைக் கொஞ்சம் கொஞ்ச மாக இடம் பெறச் செய்தல். அஃதாவது முந்தைய "தமிழ்நாடு" போன்ற முறையில் தொண்டு புரிதல்.

9. எடுத்த எடுப்பில் நாளிதழ் தொடங்குவது இயலாத செய லெனத் தோன்றினால் முதலில் கிழமை இதழாகத் தொடங்குதல்.

10. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இன்னும் சிறப்பான முறை யில் தொடர்தல்.

11. உணர்வைக் கொட்டிக் கார சாரமாக மடல் வரைவதும், ஒருவரை ஆரவாரமாகப் புகழ்வதும் மனவலிமையின் அறிகுறி யன்று. அத்தகையோர் எளிதில் சோர்ந்து விடுவர். விரைவில் மாறியும் போகலாம். விழிப்புடனிருக்க.

12. சொல்லுதல் யார்க்கும் எளியவாம். என் போலியர்க்கு மிக மிக எளியவே. ஆயின் சொல்லிய வண்ணம் செயல் அரியவே. —இதனை யான் உணர்கிறேன். ஆழ்ந்து எண்ணிச் சூழ்ந்து துணிந்து இயைவன செய்க. **—ச. தமிழ்வேலன்**, மன்னார்குடி.

0:765: ஆழ்கடலினும் ஆழ்ந்தகன்ற அறிவுடைமேலோய்! தமிழ் நெஞ்சங்கள் தளராமல் நடைபோடத்—தமிழ் மணம் தமிழகம் மட்டுமின்றித் தரையுலகெங்கும் புகழ்மணக்கச் செய்யும் பாவலரேறு ஐயா அவர்கட்கு எளியேனின் பணிவான வணக்கங்கள். ஐயா, நான் 12 ஆண்டுகளாக இடைநிலை ஆசிரியராய்ப் பணியாற்றிய நிலை நீங்கித் தமிழாசிரியராய்ப் பணியேற்றுள்ளேன். தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் மட்டுமின்றி நான் பணியேற்றுள்ள பள்ளியின் வளர்ச்சிக்கும், வழிவழி வந்த பெருமைக்கும் என் உயிர் நீங்கும் வரை தளராமல் பாடுபடுவேன்; தமிழர் அனைவரின் பெருமைக்கும் அயராமல் உழைப்பேன் என உறுதியேற்கும் இந்நாளில் தென் மொழியின் வளர்ச்சிக்கென எளியேனின் அன்புச் சிறு காணிக்கை யாக உருபா 10-ஐப் பணவிடை மூலம் அனுப்பியுள்ளேன்.

—புலவர் பாரிமணியம், க. மு. கோபிசெட்டிபாளையம்.

0.766: பேரறிவுமிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். தந்தையார் மறைவறிந்து மனம் நொந்தேன். எந்த முறையில் ஆறுதலெழுதுவது என அறியாத கரணியத்தால் இது வரை எழுதாமல் இருந்து விட்டேன். தமிழருக்கெல்லாம் கலங்கரை விளக்காய் விளங்கும் தங்களுக்குப் பல்லாயிரந் தனித்தமிழ் உள் ளங்கள் ஆறுதல் எழுதித் துயரில் பங்கேற்றது போல் நானும் பங்கு கொள்கின்றேன். **—மு. த. சின்னதுரை, c/o 56, A. P. O.**

0:767: அன்பின் பெருந்தகை நண்பரீர்! வணக்கம். தங்கள் இனிய தண்ணரும் தந்தையார் இறையடி எய்தியமை அறிந்து பெரிதும் கவன்றேன். முன் ஒரு பொழுது உடனிருந்து பன்னாள் நெருங்கிப் பழகி மகிழ்ந்தேன். உயரிய இறையியல் கருத்துகள் உடையவர்கள்; உள்ளுவனவெல்லாம் உயர்வுள்ளும் உள்ளத்தவர்; கடுநோய் கண்டும் கலங்காத கலங்கரை விளக்கம்; சிறப்பாகத் தெளிந்த இறைப்பற்று அறநெறி ஆற்றுப்படுத்தும் ஆற்றலகமும் கொண்டவர். அவர் விட்டுப் போகும் பெரும் திருமாட்சிமை வழி களையும் பெருஞ்சித்திரத்தை உலகுக்குத் தந்த பெருங்குணத்தையும் மறவாது போற்றி நன்றிக் கடனாற்றுவம்.

—பேரா, வீ. பகா. (சுந்தரம்) சொல்லழகன், க. மு.
த. இ. கல்லூரி, மதுரை-10.

0:767: அன்பிற்கினிய ஐயா! வணக்கம். தமிழ் வாழத் தம் மகனைத் தந்து மிக மகிழ்ந்திருந்த தங்கள் தந்தையார் மறைவு குறித்த செய்தியைக் காலந்தாழ்த்தி அறிந்து மிக வருந்தினேன். நெடுநாள் தொடர்பின்மையால் இந்நிகழ்விற்கு நேரில் வர இயலாது போனேனே! என்னைப் பொருத்தருள்வீர்.

—**இரா. பாவாணன்**, புதுக்கோட்டை-**4.**

0:768; அன்பிற்குரிய ஐயா, தந்தையாரின் மறைவுச் செய்தி மிகமிகப் பிந்தியே தெரியவந்தது. வருந்துகிறேன். தங்கட்கும் குடும்பத்தார்க்கும் என் ஆழ்ந்த இரங்கலையும் அன்பான ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரா. **தமிழ்க்குடிமகன்**, முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை-**14.**

0:770 தனித்தமிழ் நெஞ்சீர்! வணக்கம். மதுரை வடக்காடி வீதியிலுள்ள திருவள்ளுவர் கழகத்தில் திருவள்ளுவர் விழாவையொட்டி **17-1-1980** இரவு தமிழவேள் பி. டி. இராசனவர்கள் நினைவாகக் கருத்தரங்கு ஒன்று நிகழ்ந்தது! நிகழ்ச்சிக்கு மதுரை, காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையேற்றனர். அவர் தனித்தமிழ்ப் பற்றுளர்; நல்ல தமிழறிஞர்; தனித்தமிழன்பர்களால் போற்றப்படுபவர்; துணைவேந்தரான செய்தி குறித்து மகிழ்வதாகத் தென்மொழியே பாராட்டியுள்ளது. அப்படிப்பட்டவரது அன்றைய தலைமையுரை சிந்தனையற்றதாகவும் தெளிவற்றதாகவும் கண்டிக்கத்தக்க கருத்துப்பிழையுடையதாகவும் இருந்தது கண்டு வருத்தப்பட்டேன்.

தமிழவேள் பி. டி. இராசனவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் ஓர் அரசியல் மேதையென்றும் நாணயத்தில் மேதையென்றும் குறிப்பிட்டார். அறிவில் சிறந்தவரைத்தான் மேதை என்பது வழக்கம். அந்த வகையில் 'அரசியல் மேதை' என்பது சரிதான். **நாணயத்தில் மேதை** என்பதன் பொருளென்னவோ? திருக்குறளைப் பற்றிக் குறிப்பிடும்போது அது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை அதற்குப் பெருமையாகாது என்றார். ஒரே செய்தி பல மொழிச் செய்தித் தாள்களில் வெளிவருகிறதே! அதனால் அந்தச் செய்திக்குப் பெருமையா, என்று உவமை காட்டிக் கேள்வியும் கேட்டார். எதற்கு எதை உவமையாக்குவது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டாமா? 'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை' என்பார் தொல்காப்பியர். உவமையெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும் என்பதுதானே இதன் பொருள். துணைவேந்தர் இதனைப் பயிலாதவரல்லர். இவரே இப்படிப் பேசுகிறாரே என்பதை நினைக்கையில் வருத்தமாக இருக்கிறது.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்து இனியேனும் இதுபோன்ற தவறுகளை யாருமே செய்யாதிருக்க வேண்டுமென இந்த அறிக்கை வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

—**சி. சு. எழிற்கண்ணன். அறி. இ. மதுரை**

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்)